


# ரமணோதயம்

ஜனவரி 2022

காலாண்டு

ஜயந்தி இதழ்

விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து
உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 21 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்

ஜனவரி 2021

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2022


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | இனிவரும் திருநாட்கள் | 18 |
| 3 | பகவான் அருளும் சரணாகதி மார்க்கம் — டாக்டர். வெங்கட் S. ரமணன் | 19 |
| 4 | உபநிடதம் கூறும் நிலையான ஒன்று — கௌதமன் | 27 |
| 5 | சுவாமினி ஆத்மானந்தா 2 வி. நிரஞ்சன் | 33 |
| 6 | ரமண நிலை  வித்யாசங்கர் | 38 |
| 7 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | 39 |
| 8 | ஔவைக் குறள் — ராம் மோஹன் | 47 |
| 9 | வேதாந்த விசாரம் — டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 55 |
| 10 | புனர்வசு வண்ணம் | 65 |
| 11 | செய்திகள் | 69 |


முன் அட்டை: மார்கழித் திங்கள் மதி நிறை நன் நாளன்று நிலவுப் பயன் கொள்ளும் நமது பகவான் திருக்கோயில் வளாகம்

பின் அட்டை: தாயார் திருக்கோயிலில் ஆதிரை நாள் மார்கழியில் எழுந்து தோன்றும் நடராஜர் சிவகாமி திருமேனி

# ஆசிரியர் உரை

## இனித்தான் எழுந்திராய்

சங்ககாலம் முதல் தை நீராடல் என்னும் பாவை நோன்பு ஆன்மிக வாழ்வில் ஒரு சிறப்பிடம் வகித்து வந்தது. கன்னியர் தம் விருப்பத்திற்கேற்ற கணவனே - தன் உள்ளங்கவர் கள்வனாம் இறைவனையே அடைந்து ஒன்ற வேண்டும் என்று விரதம் மேற்கொள்வதே பாவை நோன்பு. அது மட்டுமின்றி நாடு முழுதும் மழைபெய்து நாடு செழிக்கவேண்டும் என்ற சமூக உயர்வுக்கான நோக்கமும் பாவை நோன்பின் பகுதியாக இருந்தது. இந்தியா மட்டுமல்ல, பாரதக் கலாச்சாரம் பரவியுள்ள தென்கிழக்கு நாடுகளில்கூட இவ்வழக்கம் இருந்தது. இன்றும்கூட கம்போடியா மன்னரின் பட்டாபிஷேக ஆண்டு விழாவில் இறுதி வணக்கமாக 'திருப்பாவை', 'திருவெம்பாவை' பாடல்கள் பாடப் பெறுகின்றன என்று அறிகிறோம். இந்தப் பாரம்பர்யத்தைப் பின்பற்றி முருகனாரும் தனது 'ரமண சந்நிதி முறை'யின் பகுதியாக 'ரமணத் திருவெம்பாவை'யையும் பாடி யுள்ளார். ஆண்டாளின் 'திருப்பாவை', கோதை நாச்சியார் அரங்கனையே கணவனாக வரித்துப் பாடுவது. மணிவாசகரின் 'திருவெம்பாவை', சிவ பிரானிடம் பேரன்பு கொண்ட சிவனடியாரையே தம் கணவனாக வரிப்பது. "அன்னவரே என் கணவர் ஆவர்; அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம்" என்பது திருவாசகம். முருகனாரின் திருவெம்பாவை இதற்கு அப்பாற்பட்டு, பரபக்தி உணர்வோடு ஆன்மசாதனை செய்யும்போது எவ்வாறு நமது தன்முனைப்பு முற்றிலும் பகவானின் அருளால்

*அழிந்துபட்டு, பகவானுடன் அத்வைத நிலையில் ஒன்றுதலைக் கூறுகிறது.*

*'அஹம் ப்ரம்மம்' என்னும் இவ்விறுதி அத்வைதப் பேருணர்வு அஹங்காரச் செருக்கால் கூறுவதல்ல. முற்றிலும் அஹங்காரம் நிலையிலேயே அது முகிழ்க்கிறது என்று முருகனார் பாவை நோன்பின் அத்வைதத் தத்துவத்தை விளக்குகிறார்.*

*யான்பரம் என்றே செருக்காது என்னுள்ளே வேங்கடவன்*
*தான் கடவுளாகத் தலைப்பட்டு ஒளிர்வதனால்*
*ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்உள்ளமும் போய்*
*நான்கெட்டு அதுவாய் நடுநின்ற மெய்ஞ்ஞான*
*வான்கடவுளாக வழங்குதலை யார் அறிவார்*
*யானொடு தான் என்னும் இருவோரும் அன்றிக்கே*
*நானென்னும் சொற்பொருளை நாடி இதயத் தடத்து*
*நான் கெட நன்கு ஆடி நயவேலோர் எம்பாவாய்.*

*– (திருவெம்பாவை, 22)*

*பொருள்: 'அஹம் பிரம்மாஸ்மி' - நான் யாம் பொருள் என்று விசார யோகம் மூலம் அறிந்து கூறும்போது, அது ஆணவத்தின் பால் பட்டதல்ல. ஏனெனில் பகவான் என் இதயத்தே தானே வந்து அமர்ந்து 'நான் பிரம்மம்' என்னும் பரமாத்ம உணர்வை எழுப்புகிறார். 'நான்' என்னும் தன்முனைப்பு, அழியப்பெற்று நானே அதுவாய் (தத் த்வம் அஸி) என்று சிதாகாசத்தில் பரம சைதன்யமாக விளங்குவதே அறியவும் வேறு ஒரு பொருளில்லாமல் சுத்த அத்வைதமாய் என்னுள் பரிமாணம் நிகழ்ந்தது. யான்-நான், அஹங்காரம் - மமகாரம் அருளால் அழியப் பெறுவதைக் காண அங்கே வேறு எவர் உள்ளனர்? இந்த நான்-தான் என்னும் சொற்களின் உண்மைப் பொருள் எது? அது எங்கிருந்து எழுகின்றது என்பதை ஆன்மிக இதயமாம் பொய்கையில் ஆழ்ந்து, நாடி அறியும்போது 'நான்' என்னும் ஜீவபோதம் அழிந்து ஆத்ம தத்துவம் பிரகாசிக்கிறது.*

*பகவான் உள்ளது நாற்பது 28-ஆம் பாடலில் விளக்குகிறார்: 'எழும்பும் அகந்தை எழும் இடத்தை' - சுத்த மௌனத்துடன் ப்ராணாயாமம் செய்து, ஒருமுக நோக்குடன் இதயத்துள்ளே ஆழ்ந்து அறிவாயாக. தத்துவப் பிழிவாய் உபதேசிக்கும் உள்ளது நாற்பது பாடலின் கருத்தை அழகாக சங்கத் தமிழ் பக்தி மரபில் முருகனார் திருவெம்பாவையில் விளக்குகிறார்.*

*இறைவன் ரமணன் அருள்மழை பொழிவதை முதலடியாகக் கொண்டு ரமணத் திருவெம்பாவையைத் தொடங்குகிறார் முருகனார்.*

***அண்ணாமலை ரமணன் அன்பர்க்கு அருள்மாரி***
***கண்ணாலே பெய்யும் கருணைத் திறம்பாடி***

*என்று முருகனார் துவங்குகிறார். அண்ணாமலையில் எழுந்தருளி இருக்கும் ரமண பகவான் தன்னை நாடிவரும் அடியவர்க்கு தன் திருக்கண் நோக்கத்தால் அருள்மழையைப் பொழிவிக்கும் அருட் செயலிலிருந்து திருவெம்பாவை துவங்குகிறது.*

*மணிவாசகர், திருவெம்பாவையின் 16-ஆவது பாடலில் இதை ஒத்த கருத்தை எழிலுற விளக்குகிறார்.*

***. . . நம்தம்மை ஆளுடையாள்***
***தன்னில் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு***
***முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே***
***என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.***

*திருவண்டப் பகுதியில் மாபெரும் உருவகம் ஒன்றைச் செய்த மணிவாசகர், இப்பாடலில் மழையை, இறைவியோடு உவமை செய்கிறார். உலகினை, உயிர்களை, மழை புரத்தல் போன்று, ஸ்ரீமாதவும் ஜீவர்களைப் புரக்கிறாள். வெள்ளைமேகம் கடல் நீர் முகந்துகொண்டு மேலெழும்பி, நீர்த்துளிகள் நிரம்பியதில், உண்ணாமுலை அம்மன்போல் நீல நிறம் பெற்று, அவள் திருவடிச் சிலம்பின் ஒலிபோல் இடிமுழங்கி, அவளது உருவம்போல் வானவில்லை*

உண்டாக்கி நம் ஊனக் கண்ணுக்குத் தெரியாமலே பொழிந்து நம்மை அரவணைத்துக் காப்பாற்றும் அருளைப்போலவே, கண்ணுக்குத் தெரியும் மழை பொழிவதாக என்று வேண்டுகிறார் மணிவாசகர்.

பரபக்தியினை மிகுதியால் கொஞ்சம் கொஞ்சமாக தன்முனைப்பு மறைந்து முடிவில் எங்கும் பெற்றிலும் இறைவனைக் கண்டு உணரும் பரிணாமம் வந்தது. அருணாசலன் திருவருள் தமக்கு மட்டும் அல்லாமல் அதனை வேண்டி நிற்கும் அன்பருக்கும் கிடைக்க வேண்டும் என்று முகிழ்ந்து வருகிறது. நல்லோர்-தீயோர், உடையவர்-அல்லாதவர் என்று வேறுபாடின்றி அனைவருக்கும் நன்கு பொழிந்து உய்விக்கின்ற மழையின் தன்மை அடியாரின் நிறைக்கு வந்து, இதுவே உவகை ஆகிறது. ஒன்று உயிர்களையும், தாவரங்களையும் வாழ வைக்கின்ற மழை; மற்றொன்று அடியவர்க்குப் பொழியும் அருள்மழை. உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என்ற வேறுபாடு இல்லாமல் சரண் அடைந்தவர்க்கு எல்லோர்க்கும் பொழிகின்ற ரமண அருள் மழை.

'அண்ணாமலை ரமணன் அன்பர்க்கும் பொழியும் அருள்மாரி' - பௌதிக மழை பொழிவதால் விதைகள் உயிர்பெற்று, செடிகளாகவும், மரங்களையும் வளரச் செய்து, வளம் கொழிக்கச் செய்கின்றன. அதுபோன்று, தமக்கு உள்ளே உள்ள மெய்ப்பொருளை நாடுவோர் உள்ளத்து மெய்ப்பொருளை ஞானத் தருவாய் வளரச் செய்து ஆன்மிக வளம் கொழிக்கச் செய்யும் பகவானின் அருள் மழையைப் பற்றி முதல் பாடலில் கூறுகிறது.

பகவானது மற்றொரு சிறப்பியல்பு, தான் பரத்தி லிருந்து இழிந்த பக்த அவதார வடிவம் என்றாலும், தன்னை நாடி வந்த அன்பர்களைத் தன்னுடன் ஒப்பிடும்போது, சிறிதும் தகுதி பெறாதவர் என்று எண்ணி அவர்களைப் புறம் தள்ளாமல், அவர்களைத்



தம்மிடம் சரண்புகுந்த முதலாம் நாள் முதலாய் அவர்களைத் தன் ஸந்நிதானத்தில் அமர்த்திய பேரருளைப் பாராட்டுகிறார் முருகனார்.

*தன்னளவு இல்லாத் தலைமையான் வேங்கடவன்*
*என்னளவு இல்லார் இழிசினர்என்று எள்ளாது*
*நென்னலால் தன்சந் நிதிமுன் நிகழ்வித்து*
*நன்னலமாய் ஆண்ட நலம்.*

*– (ரமணத் திருவெம்பாவை, 3)*

என்று மக்கள் அனைவரையும் ஒரே சமத்துவ நிலையில் கண்டு, சற்றும் உயர்வு-தாழ்வு வேறுபாடு காட்டாத பகவானின் திருவருளை முருகனார் வியக்கிறார்.

பகவான் வாழ்க்கையிலும் பல நிகழ்வுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. ஓர் ஆண்டு தீபத்திருவிழா அன்று பெருமழை பெய்தது. பிரதக்ஷிணப் பாதை முழுதும் சேறும், சகதியும் ஆனது. அந்தச் சேறு பதிந்த பாதங்களுடனே சாமான்ய மக்கள் பகவானைத் தரிசிக்க, அவர் அறைக்கு வருவார்கள் என்று எண்ணிய ஆச்ரம நிர்வாகிகள், சேறு படிந்த கால்களுடனும், கைகளுடனும் கிராம மக்கள் பகவானின் அருகாமையில்

வந்து அவரது சூழலையும் அசுத்தப்படுத்தக் கூடும் என்று அஞ்சினர். அவர் அருகாமைக்கு அவர்கள் வருவதைத் தடுக்க, பகவானின் ஸோபாவினை ஒட்டியுள்ள மரத் தடுப்பினை மூன்று, நான்கு அடிகள் தள்ளி வைத்தனர். வந்து பார்த்தார் பகவான். எனினும் ஆச்ரம அதிகாரிகளை அவர் ஒன்றும் கூறவில்லை. தானே ஆசனத்தில் இருந்து தடுப்பிற்கு மிக அருகில் நகர்ந்து பொதுமக்கள் தன் பாதங்களைத் தொட்டு வணங்கும் வண்ணம் தரையில் அமர்ந்து கொண்டார்.

வந்து பார்த்து அதிர்ந்த அதிகாரிகள், “பகவானே! இவர்கள் வந்து உங்களைச் சேறாக்கி விடக்கூடாது என்றுதான் நாங்கள் தடுப்பை நகர்த்தி வைத்தோம். அன்பர்கள் சற்றுத் தொலைவில் இருந்து பகவான் தரிசனத்தைப் பெறலாமே,” என்றனர்.

அதைக் கேட்ட பகவான், “அவர்கள் என் தரிசனம் பெறவா? அவர்கள் அனைவரும் அருணாசலனின் சொரூபம். அவர்கள் தரிசனத்தைப் பெறவே நான் இங்கு அமர்ந்துள்ளேன்!” என்றார். இதுவே இந்தத் திருவெம்பாவைப் பாடலின் விரிவுரையாய் அமைகிறது.

பகவானை அன்பர் தலைமேல் பாதம் பதிக்கும் அண்ணலாய் ஒன்பதாம் திருவெம்பாவையில் விவரிக்கிறார் முருகனார்.

**கண்ணவாய் நின்ற கனவருளான் காதலார்**
**எண்ணவாய் நின்ற இதயத்தான் என்தலைமேல்**
**திண்ணமாய் இன்னினியும் தீப்பிறவி சேராமே**
**வண்ணமாச் சூட்டிய வார்கழலான் வாரிதிசூழ்**
**மண்ணவாய் நின்றபல மாண்பினான் மண்கடந்து**
**விண்ணவாய் நின்ற விழுப்புகழான் வேங்கடவன்**

பகவானை நேரில் கண்டு வணங்கிய கிட்டத்தட்ட 480 அன்பர்களது எண்ணங்கள் பல்வேறு நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை அனைத்திலும்

*ஊடோடும் கருத்து, எங்ஙனம் பகவானது ஒரு பார்வையே அவர்கள் உள்ளத்துள் புகுந்து, அகலாது நின்று ஓர் ஆத்மிக புரட்சியை உள்ளே உருவாக்கியது என்பதாம். இதே கருத்தை முருகனார் மேற்கண்ட ஒன்பதாவது பாடலில் மொழிகிறார்.*

*"அவர் என்னை நோக்கியவுடன் அவர் திருக்கண் நோக்கம் அகலாது நிற்கிறது. என் உள்ளத்தில் அவர் நினைவே வேர் கொண்டுள்ளது. தீயைப் போல் சுட்டெரிக்கும் வினைப் பயனால் வந்த சம்சாரம் என்னை வந்து பற்றாது, ஒரு vaccine நோயைத் தடுப்பதுபோல் தடுத்து, தன் திருவடிகளை என் தலைமேல் வைத்துக் காத்தருளுகிறார் பகவான். இந்த மண்ணுலகத்தை கடைத்தேற்றுவதற்காக வந்த திருஅவதாரம் அவர். இந்த மூவுலகினையுமே தாண்டி, திரிவிக்ரமன்போல் உயர்ந்த சிறப்பினை உடையவர் பகவான்" என்று பாடுகிறார் முருகனார்.*

*தலைமேல் திருவடி வைத்து ஆட்கொள்ளுதல் ஒரு மிகச் சிறந்த உருவகம். தானே மிக உயர்ந்தவன் என்று இறுமாப்பு கொண்ட மஹாபலியிடம் மூன்றடி மண் வாங்கி, ஒரே வினாடியில் அண்டசராசரம் அனைத்தையும் கடந்து நின்றார். அந்நொடியிலேயே தன் ஆணவம் அழிந்த மஹாபலி மூன்றாம் அடி வைக்க இறைவன் இடம் கேட்டபோது, என் தலைமேல் வையுங்கள் என்று கூறினான். பெருமாள் திருவடியினால் அழுத்தப் பெற்ற மஹாபலி நேர்கீழே பாதாள உலகம் சென்று ஆட்சி புரிகின்றான். இதைச் சுட்டுமாறான், பகவான் அருணாசல பதிகத்தில்,*

*வெளிவராய் அருணாசலா! என்தலையில் நின்*
*விரிமலர்ப் பதத்தினை வைத்தே!*

*என்று பாடுகிறார்.*

*இதிலும் ஒரு நயம் உள்ளது. மஹாபலி ஓர் அரக்கன் ஆனதால், இறைவன் தன் பாதத்தைக் கனமாக வைத்து*

*அழுத்தினான். ஆனால் என்போன்ற மென்மை உள்ளம் கொண்ட பக்தர் வேண்டும்போது, இறைவன் திருவடியும், 'விரிமலர்ப் பதம்' ஆகி, மென்மையான பாதமாக அடியார் தலைமேல் வைக்கப்பட்டு அருள் தருகிறது.*

*பாவை நோன்பில் ஈடுபடும் பெண்கள் எங்ஙனம் பகவான் ஆகிய அருணாசல பிம்பத்தைப் பாடி வணங்குகிறார்கள் என்பதை முருகனார் அழகுற விளக்குகிறார்.*

*பகவானின் ஒவ்வொரு உறுப்புகளும், உயர் தன்மையும், கொள்கைகளும் இப்பாடலில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. இந்த 12-ஆவது பாடலை இப்போது அனுபவிப்போம்.*

***கண்ணின்ற கஞ்சத்தால் காட்டுகின்ற மெய்யுருவால்***
***தண்ணென்ற நீர்மையால் சங்கம்சூழ் கொள்கையால்***
***துண்ணென்று உள்தோய்வார் மலங்கழூஉந் தூய்மையால்***
***தெண்ணின்ற வேங்கடனும் சிற்பரையும் போன்றுஇசைந்த***
***மண்ணின்ற மானதமா வாவிமானும் மடுக்கண்***
***எண்ணில் பேரின்பம் இதயத் தலம்பொங்க***
***உண்ணாரமுதம் போல் உச்சிதமாம் தீம்புகழைப்***
***பண்ணார ஓதிப் படியேலோர் எம்பாவாய்.***

*பக்திப் பெருக்கில் திளைக்கும் பெண்களே! தன்னுடைய திருக்கண் நோக்கத்தாலேயே ஆத்மானுபவத்தை அடியார்க்குத் தருபவன், ஸத்யமே உரு எடுத்தவன், குளிர்ச்சியான அருள் நிறைந்தவன், எல்லா நேரமும் அடியாரின் ஸத்சங்கத்தால் சூழப்பட்டவன், 'நான் யார்' என்ற ஆத்ம விசாரத்தில் ஆழ்ந்து ஞானம் அடைய அப்யசிக்கும் சாதகர்க்கு, அவரே எதிர்பாராத வகையில் சட்டென அவரைப் பரிணாமத்தில் உயர்த்தி, அவர்தம் அகந்தை அழுக்கை முற்றிலும் நீக்கித் தூய்மை ஆக்குபவன். இத்தகு சிறப்பு மிகு ரமண தேவனாக அவதரித்த சிவபெருமானுடன்*

*உமையம்மை அருணாசலத்தில் ஒன்றுபடுகிறார். இங்ஙனம் ரமணபகவான் அருளால் தூய்மை அடைந்த இதயமாம் சரஸ், இமாசலத்தில் உள்ள மானஸரோவர் என்னும் தெய்வப்பொய்கை போன்று ஞானம் பொங்கித் ததைழக்க எழுகிறது. இந்த ஞான அமுதை அருந்தி, இதனை நமக்கு அளித்த பகவானின் புகழ் பாடுவோம் என்கிறார் முருகனார்.*

*இதே கருத்து மணிவாசகரின் திருவெம்பாவை 13-ஆவது பாடலில் எழிலுற எழுகிறது.*

*எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றுஇசைந்த*
*பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்*
*சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பக்*
*கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்*
*பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.*

*– (மணிவாசகர், திருவெம்பாவை-13)*

*ஆன்மிக வளர்ச்சி அடைந்த சாதகர் பார்வையில் வெறும் குளம் தென்படாது. அது இறைவனாகவே தோற்றம் அளிக்கிறது. பொருள்களையெல்லாம் படைத்து அவற்றின் உயிர்க்கு உயிராய் மறைந்து நிற்பவனல்லவா அருணாசலன்? சாமான்யர் பார்வையில் பொருட்கள் மட்டும் கண்ணில் படுகின்றன. பக்தி எனும் தேரின் மீது ஊர்ந்து செல்பவர்க்கு பொருட்கள் மறைந்து உள்ளூற சிவன் காட்சி தருகிறான்.*

*பொருள் பொருளாகத் தெரிவது ஆரம்பநிலை. பொருளும், உள்ளூறையும் இறைவனும் தெரிவது இடைப்பட்ட நிலை. நிலைபொருள் மறைந்து இறைவன் மட்டுமே தெரிவதே இறுதி நிலை.*

*'பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தியால்' அடியார் பாடுவது இடைப்பட்ட நிலை. அடியார்க்கு மலரும் தெரிகிறது. அதனுள் இருக்கும் இறைவனும் தெரிகிறான். எனவே 'மலர்ஊடு' என்கிறார்.*

*பகவானும் இக்கருத்தினை 'அருணாசல அஷ்டகம்' 3-ஆவது பாடலில் குறிப்பிடுகிறார்.*

***நின்னையான் உருவென எண்ணியே நண்ண***
***நிலமிசை மலையெனும் நிலையினை நீதான்***
***உன்னுரு அருவென உன்னிடின் விண்ணோக்கு***
***உறஉலகு அலைதரும் ஒருவனை ஒக்கும்***
***உன்னுரு உனல்அற உன்னிட முந்நீர்***
***உறுசருக்கரை உரு எனஉரு ஒயும்***
***என்னையான் அறிவுற என்னுரு வேறுஏது***
***இருந்தனை அருணவான் கிரிஎன இருந்தோய்***

*பாவை நோன்பு என்பது தன்னாட்டத்தில் - விசார மார்க்கத்தில் கவனம் செலுத்துவதே. சாதனை செய்யுங்காலை நம்மால் இதுகாறும் அறியப்பட்ட முன்னிலைப் பொருட்களில் இருந்து - அவன், அது, இது, இவன், இவள், இது - நம் நாட்டத்தை முற்றிலும் உள்நோக்கித் திரும்பி, நான் என்னும் உணர்வில் மட்டுமே நிறுத்த வேண்டும். வெளிப்பொருட்கள்மீது மனம் இதுகாறும் செலுத்தப்பட்டபோது, அதுவே ஒரு செயலாகிறது. முன்னிலை-படர்க்கை மீது மனம் செலுத்தப்படாமல் தன்மையை - 'நான்' - என்பதை நோக்கிச் செலுத்தப்படுவதே விசாரம். இது செயல் வடிவல்ல. இது இருத்தப்படும் ஸத் ரூபம். 'நான்' என்ற தன்னுணர்வின் மீது மனம் செலுத்தப்படும்போது 'செல்லல்' என்பதுபோய், இருத்தல் என்றுவடிவம் பெறும் (I-ness) முன்னிலை-படர்க்கை மீது சென்று கொண்டிருந்தவரை நமது கவன சக்தியின் பெயர் 'மனம்' அல்லது புத்தி எனப்பட்டது. ஆனால் தன்மையின் மீதே செலுத்தப்பட்டால் அது ஒரு செயல் என்ற நிலை மாறி விடுகிறது. 'அகர்மா' அல்லது 'சும்மா' இருத்தல் என்ற நிலையில் இருக்கிறது. தன்னையே நாடும் மனம், 'மனம்' என்ற நிலையில் இருந்து 'சித் ஸ்வரூபம்' ஆகிறது. அங்கு அறிவதோ, அறியப் படுவதோ ஒன்றுமே இல்லை.*

*தகுந்த விசாரம் எனும்சாதனை செய்து உள்ளே*
*புகுந்து அறிந்தேன் என்றுரைத்தால் பொய்யாம் - அகந்தை*
*அறிவது ஒன்றும் இல்லை; அழிவது தன்னை;*
*அறிவது அருணா சலம்.*

*– (ஸ்ரீ அருணாசல வெண்பா, 39)*

பகவானின் திருக்கண்ணோக்கம் செய்யும் ரஸவாதத்தை ரமணத் திருவெம்பாவையின் இன்னொரு பாடல் பகர்கிறது.

*மருவினார் தம்கண் மனக்களிம்பு மாற்றி*
*உருவிளங்கு பொன்னா ஒளிர்விக்கும் கண்ணான்*
*பொருவிலா ஞானபரி பூன்றமுழு மோனி*
*இருளது காணாத ரமணகுரு நாதன் அருள்நிதியம்*

*– (ரமணத் திருவெம்பாவை, 14)*

தன்னையே சரண்என அடைந்தவர் தமது மனக் களிம்பாகிய அகந்தையை நீக்கி 'அஹம் பிரம்மாஸ்மி' என்னும் பரமார்த்த ஸத்யம் அவர்தம் இதயத்தே ஜ்வலிக்கும்படி தன் திருக்கண்களால் ரஸவாதம் செய்விப்பவர் பகவான். கிரந்தமாய் ஒளிரும் பரிபூர்ண ஞானக் கதிரவன்; அகந்தை இருளை அக் கதிரவனின் ஞானக் கிரணங்கள் முழுவதுமாக நீக்குகின்றன. அவரது சந்நிதி தேடாதுற்ற திருவருள் நிதியம் என்று மிகச் சிறந்த எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார் பகவான்.

சுத்தமான உலோகம் ஆரம்பத்தில் மாசுமருவின்றி தூயதாய் ஒளிரும். அது இல்லச் செயல்பாடுகளால் கையாளப்படும்போது, களிம்பு என்னும் மாசு அதன்மீது ஏறிஅது தன் 'பொலிவை' இழக்கிறது. அதைத் தூய அமிலம் கொண்டு சுத்தம் செய்யும் போது, வெகுவிரைவில் களிம்பு நீங்கி உலோகம் முன்போல் பளிச்சிடுகிறது. அதுபோல, சுத்த சைதன்யத்தின் உருவாய் வந்த சித் எனும் ஆன்மா, உலக வாழ்வின் தொடர்பினால் ஆணவம், கன்மம், மாயை போன்ற

*மாசுகள் பற்றி ஆன்ம ஒளியை இழக்கின்றது. குரு நாதனின் அருள் பட்டவுடன் அந்த மனமாசுகளாம் களிம்புகள் முற்றிலும் அகற்றப்பட்டு, சுத்த சைதன்யம் ஜ்வலிக்கிறது என்பதே இந்த அழகான உருவகம்.*

*நம்மாழ்வாரின் அழகான பாடலை இங்கு நினைவுகூரலாம்.*

*பொன்னைக் கொண்டு உரைகல் மீதே*
*நிறம் எழ உரைத்தாற் போல்*
*உன்னைக் கொண்டு என் நாவகம்பால்*
*மாற்றின்றி உரைத்துக்கொண்டேன்*
*உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்*
*என்னையும் உன்னில் இட்டேன்*

*விளக்கம்: பொன்னணி ஒன்று தன் ஜ்வலிப்பை மாசு படிந்ததின் காரணமாய் இழக்கும்போது, தாய் தங்கத்தைக்கொண்டு அதன்மீது உரைத்தால் அதன் மாசு நீங்கி முன்போல் பளபளக்கிறது. அதுபோன்று என் மனமாசுகளும், அகமாயையும் நீங்க, உன் திருநாமத்தினை இடைவிடாமல் என் நாவினால் சொல்லி பயின்றேன். என் மனத்திலும் இடைவிடாமல் உன்னையே இருத்தித் தியானம் செய்தேன். அப்போது ஓர் அழகிய ரஸவாதம் நிகழ்ந்தது. என் மனதில்நீ புகுந்து முற்றிலும் நிரம்பினாய். நானே பரமாத்மாவாகிய உன்னில் முற்றுமாக நிரம்பினேன் என்று மகிழ்கிறார் நம்மாழ்வார்.*

*திருவெம்பாவை 24-ஆவது தொடங்கி 28-ஆவது பாடல்வரை முருகனார் சங்கத் தமிழ் அகத்துறை பாடலை அடியொற்றி, தலைவன் தலைவி காதல் மீதூறி இன்புறுவதை அழகுற விவரிக்கிறார். 24-ஆம் பாடலில்*

*. . . தையலர்காள். . .*
*மொய்வளம் பூத்த முகப்பொலிவான் முன்எதிர்ந்தார்*
*மைவளம் பூத்தமயல் மாய்க்கும்கண் வேங்கடவன்*
*மெய்வளம் பூத்தகழல் வேட்கையாய் மெய்ஞ்ஞான*
*தெய்வ நீராடித் திகழேலோர் எம்பாவாய்.*

*“தன்னைக் காண்பவர் கண்களை, காந்தத்தால் கவரப்படும் உலோகம் போன்று தன்னைவிட்டு அகலாது ஈர்க்கப்படும் முகப்பொலிவு உடையவனும்” என்று அகத்துறை மரபில் இளம்பெண்கள் விடாது ஈர்க்கப்படும் நயன எழில் உடையவன் என்று விவரித்தார். அதேசமயம் 6-7 அடிகளில் “தன் சந்நிதியில் வந்து சேர்பவர்களின் ஆணவ இருளை அழிக்கும் திருக்கண்ணோக்கம் உடையவன் என்று பாரமார்த்தமாகச் சிறப்புடைய திருக்கண் சிறப்பையும் ஒருங்கே அமைத்துக் கூறும் நயம் வியக்கத்தக்கது.*

*ரமணதேவனுடன் பெருங்காதலோடு இணைய வரும் பாவை நோன்பு நோற்கும் இளம்பெண்களுக்கு தெய்வீகக் காதலனுடன் உண்மையில் இணைவது எங்ஙனம் என்பதை 27ஆம் பாடலில் கூறுகிறார்.*

*துணர்மாலை சூடுவேன் தோய்வேன் தோள்என்றென்று*
*உணர்வுமிக் கீர்போல் உஞற்றும் நோன்பீர்காள்!*
*வணம்ஒன்றும் இல்லான் வடிவொன்றும் இல்லான்*
*குணம்ஒன்றும் இல்லான் குறியொன்றும் இல்லான்*
*உணர்ச்சி ஒன்று இல்லான் உணராமை இல்லான்*
*கணிச்சி கண்ணா அன்பர் கட்டழிக்க வல்லான்*
*இணைச்சு வேட்டார்க்கு அவ்விறை ரமணனோடு*
*புணர்ச்சி தானும் புணர்ப்பே போன்மேலோர் எம்பாவாய்.*

*நம் இதயதேவன் ரமணனுக்கு பூமாலைகள் அணிவிப்பேன். அவனுடைய தடர்தோள்களில் தோய்வேன், அவனோடு ஒன்று கலந்து முக்தி பெறுவேன் என்று உறுதியான பாவை நோன்பு நோற்பவர்களே!*

*இந்த ரமணக் காதலன் சாமான்யன் அல்லன். எண்ணம், வடிவம், குணங்கள், குறிகள், தன்முனைப்பு அனைத்தையும் கடந்தவன். ஆயினும் இவன் அருளுணர்வு நிரம்பியவன் (எனவே ‘உணராமை’ - என்பதும் அவனுக்கு இல்லை). தன் அருட்பார்வையால்*

*அடைந்தோர் அகந்தை முடிச்சை அவிழ்க்க வல்லவன். இவ்விரமணக் காதலனோடு இணைய விரும்பி இங்கு வேரற்று வந்திருக்கும் இளம் பெண்களே! அவன் சந்நிதானத்தில் அவனுடன் இணையும் புணர்ச்சி என்பது, பரமாத்மாவில் கரைந்து மறையும் ஆன்மிகப் புணர்ச்சியே அன்றி பௌதிக ஒன்றுதல் அல்ல என்பதை அறிவீர்களாக! என்று ஆன்மிகக் காதல் என்பது புறக்காதல் நிலையினை முற்றிலும் கடந்த,*

*ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி*
*ஒருதனது அபிமுகமாக*
*ஈர்த்து, அதைத் தன்போல் அசலமாச் செய்துஅவ்*
*இன்னுயிர் பலிகொளும்*

*– (அருணாசல பதிகம், 10)*

*என்று பகவான் தரும் சித்திரமே, இவ்வடியார் ரமணக் காதலனுடன் இணையும் தெய்வீகக் காதல் விளக்கம்.*

*எவ்வுயிர்க்கும் ஏழேழு பிறவிக்கும் உந்தன்னோடு*
*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோமே யாவோம்*
*உனக்கேநாம் ஆட்செய்வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்று*
*என்னும் ஆண்டாள் விளக்கும் தெய்வீக நிலையும்*
*நானேயோ தவம் செய்தேன்?*
*சிவாய நம எனப் பெற்றேன்*
*தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்*
*தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள்*
*செய்தான்*

*என்று மாணிக்கவாசகர் கூறும் இறைவனோடு ஒன்றும் நிலையும், இந்த ரமண அடியார்கள் நிலையும் இறுதி நிலைகள்.*

*இந்த நிலை எய்தியபின் வேறு எதுவுமே அடியார்க்குத் தேவையில்லை.*

*கண்ணார் நுதலோய் கழலிணைகள்*
*கண்டேன் கண்கள் களிகூர*
*எண்ணா திரவும் பகலும்நா*
*னவையே எண்ணும் அதுவல்லால்*
*மண்மேல் யாக்கை விடுமாறும்*
*வந்துன் கழற்கே புகுமாறும்*
*அண்ணா எண்ணக் கடவேனோ*
*அடிமை சால அழகுடைத்தே*

*– (குழைத்த பத்து-9, திருவாசகம்)*

*என்று பக்தியின் உச்சிநிலையை அடியார் பாடுகிறார்.*

*“இறைவனின் திருவடிகளையே உளம் பற்றி நின்றேன். எனக்கு இரவும் பகலும் கால அளவைகளும் மறைந்து போயின. (எனது சாதனை துவக்கத்தில் உலக வாழ்வை நீத்து இறைவனிடம் சேர வேண்டும் என்றுதான் ஆரம்பித்தேன்). இப்போது உலக வாழ்வை நீத்து, பகவான் திருவடிகளில் வந்து சேரவேண்டும் என்ற எண்ணம்கூட மறைந்து போனது. பகவானின் ஆன்மிகக் கதிர்வீச்சில் நான் பரிபூர்ணமாகக் கரைந்து அவனுடன் ஒன்றானேன்” என்பதே முருக நாயகியின் இறுதி நிலை.*

*‘பொய்ப்பால் புலம் எய்திப் போயிட’ ரமணன் அருள்வதே, இப்பாவை நோன்பு செய்த நங்கையர்க்கு ரமணன் அருளும் சிறுபறை.*

*இதுகாறும் ரமணத் திருவெம்பாவை என்னும் ரமணக் காதல் பெருங்கடலில் சில துளிகள் சுவைத்தோம். மீண்டும் மீண்டும் இதை முழுதும் சுவைக்க வேண்டும் என்னும் ஆவல் தூண்டப்படுகிறது அல்லவா!*

*உரையாடலை மீண்டும் தொடர்வோம்.*

*பகவான் பணியில் தங்கள்,*

*ராம் மோஹன்*



# இனிவரும் திருநாட்கள் 2022

| பூஜை/ விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| பொங்கல் | 14-01-2022 | வெள்ளி |
| சின்னசுவாமிகள் ஆராதனை | 17-01-2022 | திங்கள் |
| சுந்தரம் ஐயர் தினம் | 21-02-2022 | திங்கள் |
| மகா சிவராத்திரி | 01-03-2022 | செவ்வாய் |
| ஸ்ரீவித்யா ஹோமம் | 18-03-2022 | வெள்ளி |
| தெலுங்கு வருடப் பிறப்பு | 02-04-2022 | சனி |
| ஸ்ரீராம நவமி | 10-04-2022 | ஞாயிறு |
| தமிழ் வருடப் பிறப்பு | 14-04-2022 | வியாழன் |
| பகவான் 72ஆவது ஆராதனை | 28-04-2022 | வெள்ளி |
| மகாபூஜை | 24-05-2022 | செவ்வாய் |
| பசு லட்சுமி ஆராதனை | 10-07-2022 | ஞாயிறு |
| குரு பூர்ணிமா | 13-07-2022 | புதன் |
| பகவான் அருணையடைந்த தினம் | 01-09-2022 | வியாழன் |
| நவராத்திரி விழா தொடக்கம் | 26-09-2022 | திங்கள் |
| சரஸ்வதிபூஜை | 04-10-2022 | செவ்வாய் |
| விஜயதசமி | 05-10-2022 | புதன் |
| தீபாவளி | 24-10-2022 | திங்கள் |
| கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் | 27-11-2022 | ஞாயிறு |
| கார்த்திகை தீபம் | 06-12-2022 | செவ்வாய் |

# பகவான் அருளும் சரணாகதி மார்க்கம்

**டாக்டர். வெங்கட் S. ரமணன்**

*பகவானின் அருள் வெள்ளத்தில் முக்குளிக்கும் ரமண சகோதர சகோதரிகளே!*

*பகவானின் அருணை வருகைத் திருநாள் குறித்த கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இத் திருநாள் இவ்வாண்டும் செப்டம்பர் 1 ஆம் நாளன்று கொண்டாடப்படுகிறது. இத் திருநாள் தந்தையும் திருமகனும் ஐக்கியமாகிய தருணம். ரமணஅருணாசலம் என்னும் சாஸ்வதமான மஹத் தத்துவத்தை உலகிற்கு உணர்த்தியது. இத் திருநாளுக்கு முன்னர் ஆறு வாரங்களில் உலக ஆன்மிக வரலாற்றின் தாக்கம் நிறைந்த மடை மாற்றத்தின் சீரிய வெளிப்பாட்டின் சிகரமான நிகழ்வு நிகழ்ந்தது. இதுவே அத்வைத வேதாந்தத்தின் கொடுமுடியாகும்.*

*இந்த நாளுக்கு ஆறு வாரங்களுக்கு முன்னர் மதுரை மாநகரில், பல்வேறு முதிர்ந்த சாதகர்கட்கும் பல்லாயிரம் ஜீவிதங்கள் தேவைப்படும் ஓர் ஆழ்ந்த சாதனையில் அரைமணிக்கும் குறைவான கால அளவிலேயே ஒரு பாலகன் வெற்றி பெற்றான். 'ஆத்ம விசாரம்' என்னும் மிக சக்தி வாய்ந்த ஆன்மிக அஸ்திரத்தைக் கண்டறிந்த இப்பாலகன் பின்னர் தன்னை அணுகிய அனைவருக்கும் இதனை உய்வதற்கு ஒரு உபாயமாகச் செல்லும் வழியாகக் காட்டினான்.*

---

*ஸ்ரீரமணாச்ரமத் தலைவர் டாக்டர். வெங்கட் S. ரமணன் அருணை விஜய நாளன்று ஆற்றிய உரையின் தமிழாக்கம்.*

*வரையறை அற்ற பூர்ணத்தினை அடைந்து அதிலேயே கரைய, இதுவே 'நேர்வழி' என்று அனைவருக்கும் உணர்த்தினான். இந்தத் தன்னாய்வைத் தொடங்கிய மாத்திரத்திலேயே உள்ளத்தில் மடைமாற்றம் நிகழத் தொடங்குகிறது. அவரவர் வினைப்படி அது வெகு விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ சித்திக்கலாம். எனினும் தான் உண்மையில் யார் என ஆராயத் தொடங்கும் இந்த முயற்சியில் தன்முனைப்பு ஈடுபடத் தொடங்கியபோதே படிப்படியாக தேகமன அபிமானம் குறையத் தொடங்கி, ப்ரக்ஞை உணர்வு மேலோங்கத் தொடங்குகிறது.*

*தன்னுடைய சுயாநுபவத்தை பகவான் 'அருணாசல அஷ்டகம்' இரண்டாம் பாடலில் விளக்குகிறார்.*

***கண்டவ னெவனெனக் கருத்தினு ளாடக்***
***கண்டவ னின்றிட நின்றது கண்டேன்***

*இதன் பொருளாவது: காண்பவன் யார் என நான் மனதில் ஆராயும்போது, காண்பவன் என்பவனே மறைந்துபோய், ஆத்மா ஒன்றே நிறைந்து நின்றது.*

*சாதகர் எவருக்குமே பிராரப்தத்தினால் விதிக்கப்பட்ட கால அளவுக்கு முன் இந்த ஆத்மிகப் பயணம் முடிவதில்லை. பகவானின் ஆன்ம எழுச்சி மிக வியப்பான ஒன்று. ஜூலை இறுதி வாரத்தில் இல்லம் துறந்து வந்த பாலகன் திருவண்ணாமலை இரயில் நிலையத்தை ஆனந்தத்தில் துடிக்கும் மனத்துடன் வந்து எய்தினான். நேராகப் பெரிய கோயிலுக்குள் நுழைந்தவுடன் கோபுர வாயிலில் உள்ள பெருங்கதவு முதல், கருவறையில் உள்ள கதவுகள் வரை அனைத்துமே அவனுக்காகக் காத்திருப்பதுபோல் திறந்து காத்து இருந்தன. என்ன ஆச்சரியம்! அந்த பிரம்மாண்டமான சந்நிதானத்தில் இச்சிறுவனைத் தவிர வேறு யாருமே இல்லை. நேராகக் கருவறையில் நுழைந்த சிறுவன், உள்ளத்தில் ஆனந்தம் மீதூற*



அக்கணமே தன் தந்தை அருணாசலத்துடன் ஒன்றினான். இந்த ஆத்மிகப் பயணத்தின் கொடுமுடியாக இந்த அருணாசல வருகை நாள் திகழ்ந்தது.

இந்த விவரிப்பு வெறும் கவிதைத்துவமான உருவகம் இல்லை. இதனை விசாரிக்கும்போது புகழ்பெற்ற தத்துவ அறிஞர் ஜான் கிரைம்ஸ், 'Ramana Maharshi and the Crown Jewel of Advaita' (அத்வைதத்தின் மகுடமணியாம் ரமண மகரிஷி) என்னும் தனது நூலில் கூறுவது யாதெனில் இந்த அருணை விஜயம் நிகழ்ந்த செப்டம்பர் ஒன்றாம் தேதி, பெரிய கோயிலின் வரவுசெலவு தணிக்கைகள் நடைபெறும் நாள். ஆகவே, ஆலய அலுவலர் அனைவரும் அதிலேயே ஈடுபட்டிருந்தனர். எனவே ஆலய வளாகத்திலேயோ, கருவறையிலேயோ ஒருவரும் இல்லை. எனவே, தந்தை அருணாசலனின் கருவறை இருகரம் நீட்டி பகவானைத் தனதுள் நேராக வர இடம் கொடுத்தது. பௌதிக வடிவில் முன்பே செய்யப்பட்ட ஒரு நிகழ்வு, தந்தைக்கும் தனயனுக்கும் இடையே தடையேதும் இல்லாத ஒரு ஐக்கியம் நிகழ வழிவகுத்தது.

வியவகாரக உலகில் திட்டமிடப்பட்ட இந்த ஓர் சாமானிய அலுவலக நிகழ்ச்சி பரமார்த்திக நிலையில்

*தந்தையும் தனயனும் இடையூறின்றி ஒன்றாகும் ஆன்மிக நிகழ்வாக காரணமாக அமைந்தது. பேராசிரியர் சுவாமிநாதன் கூறுகிறார்: ஒரு ஞானி மட்டுமே ஒரு நில நீர் வாழும் உயிர் போன்று வியவகாரிக உலகிற்கும் பரமார்த்திக உலகிற்கும் தங்கு தடையின்றி பயணிக்க முடியும்.*

*அன்பர்களே! இத்திருநாளில் பகவானின் உபதேசத்திற்கு நம்மைப் பூர்ணமாக அர்ப்பணிக்க உறுதி கொள்வோம். ஆத்ம சாட்சாத்காரம் பெற உறுதியான பாதைகள் இரண்டு மட்டுமே உள்ளன என்று பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார். ஒன்று விசாரம், மற்றொன்று ஆத்ம சமர்ப்பணம். 'நான் யார்' என்ற விசாரத்தை, இடையறாது செய்வாயாக, அல்லது 'நான்' என்ற தன் முனைப்பே இன்றி முழுவதுமாக சரணாகதி செய்.*

*பகவானது உபதேசங்களை விளக்கும் குருவாசகக் கோவை நூலில் முருகனார் கூறுகிறார்: ஞானப் பெருவழியும், தன்முனைப்பற்ற பக்தி நெறியும் ஒன்றுக்கு ஒன்று இணைந்தவையே. ஒன்றுக்கு ஒன்று பிரிதல் இன்றி, இரண்டையுமே பின்பற்றலாம்.*

*இன்று, ஆத்ம சமர்ப்பணம் அல்லது சரணாகதி குறித்து நாம் காணலாம். செப்டம்பர் 1 ஆம் தேதி ஆத்ம சமர்ப்பணம் அல்லது சரணாகதியின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் நாள். பகவான் பூர்ண சரணாகதியின் பூர்ண வடிவம். 16 ஆவது வயதிலேயே தனது இல்லம், உறவினர், நண்பர்கள் அனைத்தையுமே துறந்து, 'தந்தையே உன்னையே நாடி வந்தேன்' என அருணாசலம் வந்தடைந்தான் அப்பாலகன். அடுத்த 54 வருடங்கள் அருணாசலனாம் தந்தை அவரை முற்றும் புரந்து அருளினான்.*

*அக்ஷரமணமாலை 94-ஆவது பாடலில் பகவான் கூறுகிறார்:*

*வரும்படி சொலிலை வந்தென் படியள*
*வருந்திடுன் றலைவிதி யருணாசலா*

*“நீதானே எனை இங்கு வருமாறு அழைத்தது! எனவே நான் வந்து விட்டேன். இனி என்னைப் புரத்தல் உன் கடன். அது உனக்கு வருத்தம் அளிப்பதாயினும் நீ வருந்தி வரவழைத்துக் கொண்ட தலைவிதி அது!”*

*வாவென்று அகம்புக்கு வாழ்வருள் அன்றேஎன்*
*வாழ்விழந்தேன் அருள் அருணாசலா (95)*

*“‘நீ வா’ என்று என்னை வரவேற்று, என்னுள் புகுந்து எனக்கு அருள் வாழ்வினை நல்கினை. அக்கணமே என் தனித்துவத்தை நான் இழந்து விட்டேன், அருணாசலா!”*

*நவமணிமாலை ஏழாவது பாடலில், பகவான் கூறுகிறார். “நீ என்னை ஈர்த்து ஒன்றாக்கிய பின் என் உடலும் உள்ளமும் உன்னதே ஆயின. எனக்கு வேறு என்ன தேவை?”*

*பகவான் உபதேசத்தின் முதல் வெளிப்பாடான, 1902-இல் வெளியான நான் யார் நூலில், சிவப்பிரகாசம் பிள்ளைக்கு மணலில் எழுதிக் காட்டிய விடையில் பகவான் சரணாகதியைப் பற்றிக் கூறுகிறார். இறைவன்மீது எவ்வளவு சுமைகளைச் சுமத்தினாலும் அவர் அவற்றைத் தாங்கிக் கொள்வார். இறைவனின் அளவிடற்கரிய சக்தியே எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி, தாங்கிக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. பின் நாம் ஏன் கவலையுற வேண்டும்? பல்வேறு விதமான எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டு, ஸ்திரமற்று இருப்பதை விட்டு, அந்தப் பரம்பொருளுக்குப் பணிவுடன் அடிபணிய வேண்டும். எல்லாச் சுமைகளையும் ரயில் வண்டியே சுமக்கும் என்று அறிந்த பின்னரும் நமது பெட்டி போன்ற சுமைகளை இரயில் மேல் பலகையில் வைப்பதற்குப் பதிலாக, மிக்க சிரமத்துடன் நமது மடிமீது தாங்கிச் செல்வது எவ்வளவு முட்டாள்தனம்?*

*பகவானின், Talks பக்கம் 425 தினை இங்கே எடுத்துக் காட்டுகிறேன். இறைவன் நம் முன்னர் தோன்றி உள்ளானோ அன்றி மறைந்துள்ளானோ, அது பற்றிக் கவலைப்படாமல் அவனிடம் முழுமையாகச் சரணடைவாய். அவன் நம் விருப்பப்படிதான் செயலாற்ற வேண்டும். நாம் விரும்புவதையே அளிக்க வேண்டும் எனில் அது சரணாகதி அல்ல. அது அவனுக்கு நாமிடும் கட்டளை!*

*அவனிடம் நான் சரண் அடைந்துள்ளேன் என்று கூறிக்கொண்டே அதேசமயம் அவன் என் எண்ணப்படிதான் செயல்பட வேண்டும் என்பது தவறானதல்லவா? எது நமக்கு நல்லது என்பதை அவன் அறிவான். அதை எப்படித் தர வேண்டும் என்பதும் அவனுக்குத் தெரியும். எல்லாவற்றையும் முழுமையாக அவனிடத்தில் ஒப்புக் கொடுத்து விடுவாய். அந்தச் சுமை முழுதும் அவனே தாங்கட்டும். அந்நிலையில் உனக்கு எந்தவிதப் பொறுப்பும், கவலையும் இல்லை. எல்லாமே அவன் பொறுப்பே. இந்நிலைதான் பூர்ண சரணாகதி. இதுவே பக்தி.*

*இங்ஙனம் நாம் செயலாற்றும்போது ஒரு ஐயம் எழலாம். இது ஒரு அவிழ்க்க முடியாத முடிச்சாகத் தோன்றலாம். சரணாகதி செய்ய வேண்டும் என்ற விரும்பம்கூட நம் மனதில் எழும் ஓர் இச்சைதானே! முழுமையாக அவா அனைத்தையும் விட்டு விடுதலே பூர்ண சரணாகதி அல்லவா? இந்த ஐயம் சாதனையின் போக்கில் ஓர் அவிழ்க்க முடியாத முடிச்சு. இந்தப் பிரச்சினை ஏன் எழுகின்றது என்றால், நமக்கு தனிப்பட்ட ஜீவன் என்று ஒன்று ‘உள்ளது’ அதனைத் தன்னைத் தானே அழித்து, பரத்துடன் ஒன்றுபட ‘விழைகிறது’ என்ற எண்ணத்தாலேயே தான். இதனால், நம் அவாவிலிருந்து விடுபட்டு அளவற்ற தன்முனைப்பற்ற நிலையை எய்த வேண்டும் என்று செய்யும் ஒவ்வொரு முயற்சியுமே*

*நம்மை நீண்ட ஒரு தன்முனைப்பு சார்ந்த முயற்சியில் சிக்க வைக்கிறது. 'நான்' என்ற ஒரு தனித்துவம் உண்மையில் உள்ளது என்ற தவறான நம்பிக்கையால்தான் செயல்பாடு என்னவெனில், யாரோ ஒருவர் காலில் விழுந்து 'நான் உன்னைச் சரணடைந்து விட்டேன்' என்று கூறுவதல்ல. 'சரணடைகிறேன்' என்று முயலும் ஓர் தனிப்பட்ட வியக்தி என்று ஒன்றுமே இல்லை. இந்தத் தனித்துவமான வியக்தி என்பது எந்தச் சமயத்திலும் உண்மையில் இருந்ததில்லை என அறிவதே.*

*பகவான் Talks 176 (வசனாம்ருதம்) இல் வினவுகிறார்: யார், யாரிடம் எப்போது சரணடைவது? இடையறாது மனதில் மெய்யுணர்வோடு ஆராயப்படும் ஒன்றே உண்மையான ஆத்மிக சாதனை. மற்றபடி தியானம், சரணாகதி அல்லது விசாரம் என்று நாம் பயில்வதெல்லாம் வெறும் கண்துடைப்புக்களே.*

*சரணடைகிறேன் என்று கூறும் இந்தப் பொய்மனம் ஜீவனை அகற்றுவதே, நம் மனத்தை அழித்து, ஆத்மசாட்சாத்காரம் அடையும்வழி எனப் பகவான் கூறுகிறார்.*

*நம்மால் 'மனம்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த எண்ணக் களஞ்சியம் மற்றும் ஆசைகளை ஒதுக்காமல் நாம் உண்மையில் சரணாகதி செய்தல் இயலாது. பகவான் கூறும் வழி யாதெனில் மனதின் அடி ஆழம் வரை சென்று அது தன்னில் சூழ்ந்து அழிவதைக் காண்க. மனம் அழிந்தபின் மீதி இருப்பதே, பரம்பொருள்.*

*Talks 175-இல் அவர் கூறுகிறார், ஒருவன் இங்ஙனம் பூர்ண சரணாகதி செய்வதே போதுமானது. சரணாகதி என்பது, நமது தோற்றத்தின் முழுமுதற் காரணத்திடம் நம்மை முழுமையாக ஒப்படைப்பதே. உன்னுடைய மூலத்தை நாடி அதிலேயே ஒன்றுக. பகவான் கூற்றுப்படி சரணாகதி என்பது, தன்னுள்ளே ஆழ்ந்து, இருப்புணர்வை கண்டறிந்து, அதிலேயே ஒன்றுவதாகும். மனம்*

*அலைபாயும்போது எண்ணக் குவியல்களை உருவாக்கி அதனையே நீடிக்கச் செய்கிறது.*

*சரணாகதி என்பது நம்முள்ளேயே ஆழ்ந்து இருப்புணர்வை முற்றிலும் உணர்ந்து அதற்குச் சரண் அடைவதாகும். சரணாகதியின் இறுதி நிலையாவது, மனக் கட்டுக்களைக் கடந்து, அறியாமைமீது நாம் கொண்ட ஆழ்ந்த இருப்பினையே கடப்பதாகும். எண்ணங்களின் தொகுதியாக மனம் எழும்போது, அது பற்றுக்களைப் பற்றிக் கொள்கிறது. எனவே எண்ண அலைகளை அழித்து கடந்து செல்க. ஜீவாத்மா என்று ஏதோ, ஒன்று உள்ளது. அதுவே சரண் செய்கிறது என்பது தவறான எண்ணம். அந்தத் தவறான எண்ணத்தையே நீக்க வேண்டும். ஆத்மசாட்சாத்காரத்துக்கு ஆன பாதை ஒன்றேதான். அதனை ஆத்ம சமர்ப்பணம் என்றோ, ஆத்ம விசாரம் என்று எப்படி அழைத்தாலும் சரி. அது ஒன்றே தான்.*

*ஆத்ம ஞானத்தின் இறுதிநிலை அறியாமையை அழித்து, ஞானத்தில் நிலைபெறுவதே. பகவான் கூறுவதாவது, "ஆத்மிகப் பாதையில் நாம் செய்யும் முயற்சிகள் யாவும் நம்மை ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கே நடத்திச் செல்லும். அதன்பின், கடவுள் என்றோ, குரு என்றோ நாம் அழைக்கும் பரத்தின் பேரருளே நம்மை ஆத்ம சாட்சாத்காரம் அடையச் செய்கிறது. கடவுள், குரு இருவரும் ஒருவரே. அவர்தம் அருளால் ஆத்மா நம்மை நமது நோக்கில் வெற்றி பெறச் செய்கிறது."*

*இறுதியாக நான் கூறுவது யாதெனில், சரணாகதி என்பது ஒரு செயலற்ற நிலை அல்ல. அது செயலாக்கத் துடன் மன அலைகளை விலக்கி இடையறாது செய்ய வேண்டிய ஒன்றாகும். இதைப் பின்பற்றினால் நமது நோக்கமே நிச்சயமாக நிறைவேறும் என்று பகவான் அறுதி இடுகிறார்.*

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய!*


# உபநிடதம் கூறும் நிலையான ஒன்று

**கௌதமன்**

எல்லாம் அழியும்போது, அழிவு என்பதே இவ்வாறு என்றும் நிலையாக இருப்பது ஆன்மா ஒன்றே! என்று சாந்தோக்ய உபநிடதம் கூறுகிறது. உலகப் பொருட்கட்கும் ஆன்மாவிற்கும் இடையே உள்ள தொடர்பைப் பல எடுத்துக்காட்டுகளால் உபநிடதம் விளக்குகிறது. உத்தாலக ஆருணி, தன் மகன் ஸ்வேத கேதுவுக்கு பிரம்மம் என்னும் அடிப்படை ஆன்மிகத் தத்துவத்தை உபதேசிக்கிறார். இதில் அவர் மூன்று உதாரணங்களைக் காட்டி விளக்குகிறார்.

மகனே! ஸ்வேதகேது, இந்தக் குயவர் அங்கே மண்பாண்டங்களை வனைந்து கொண்டு இருக்கிறார். இவை பல்வேறு வடிவங்கள் கொண்டன. சமையற் பானைகள், நீர் சேமிக்கும் ஜாடிகள், தட்டுகள், மூடிகள் எனப் பல்வேறு வடிவங்கள், பல்வேறு பரிமாணங்கள். ஆனால் அனைத்தும் களிமண் என்னும் மூலப் பொருளால் செய்யப்பட்டவை. களிமண் என்பது என்ன என்று தெரிந்து கொண்டால், இந்தப் பாண்டங்கள் அனைத்தின் அடிப்படைத் தன்மையும் விளங்கிவிடும். இவை அனைத்துமே களிமண் என்ற ஒரே மூல வஸ்துவின் பல்வேறு வெளிப்பாடுகளே!

இந்தப் பொற்கொல்லரின் பட்டறையைப் பார்! இங்கு செய்யப்பட்டிருக்கும் அனைத்துமே தங்கம் என்னும் மூலப் பொருளால் ஆனவையே. இருந்தாலும் எத்தனை எத்தனை அழகிய மாறுபாட்டில் சிறக்கும் வடிவங்கள். எனினும், தங்கம் என்னும் மூலப்



பொருளின் தன்மையை அறிந்தவனுக்கு இவை அனைத்தின் அடிப்படைத் தன்மையும் விளங்கிவிடும். இவை அனைத்தும் தங்கம் என்னும் மூலப் பொருளின் வெவ்வேறு வெளிப்பாடுகளே!

இந்தக் கொல்லனின் இரும்புப் பட்டறையில் எத்தனை விதமான இரும்புப் பொருட்கள் உருவாகின்றன. பல்வேறு வேலைக்குப் பயன்படும் கத்தி, அரிவாள், ஏர்முனை, தராசு, சுத்தி, ஆணி போன்ற பல்வேறு சாதனங்கள் இங்குத் தயாராகின்றன. இவை அனைத்தும் வடிவத்திலும் பயன்பாட்டிலும் வேறுபட்டிருந்தாலும் அனைத்தும் இரும்பால் ஆனவையே. இரும்பின் தன்மை அறிந்தவர்க்கு, அவை அனைத்தின் தன்மையையும் விளங்கி விடும். இவை அனைத்தும் அடிப்படை மூலமாகிய இரும்பின் வேறுபட்ட உருவங்களே!

இங்ஙனம் உத்தாலக ஆருணி ஸ்வேத கேதுவுக்கு, உலகில் உள்ள எல்லாப் படைப்புகட்கும் அடிப்படை

*மூலம் ஆன்மாவே. இவை அனைத்தும் ஆன்மாவின் வெவ்வேறு வடிவங்களே. வடிவத்தில் மட்டும் வேறுபடும் இவற்றை அடிப்படையில் வேற்றுமை என்று நாம் தவறாக எண்ணி விடுகிறோம். 'அதிஷ்டானம்' எனப்படும் அடிப்படையில் இவை அனைத்தும் ஒன்றே. இவை எல்லாமும் அந்த அடிப்படை ஆன்மாவின் வெவ்வேறு பரிமாணங்களே என்பதை உணர்ந்து கொள்பவன் ஆன்ம ஞானம் பெறுகிறான். இந்த அடிப்படையை உணர்ந்தார்க்கு சஞ்சலம், குழப்பம், துயரம் எதுவுமின்றி, எப்போதும் சாந்தியில் திளைத்திருப்பர் என்கிறார்.*

*எல்லா உயிர்களையும் தன்னகத்தே இணைத்து நிற்பது இந்த அடிப்படை ஆன்மாவே. வனவாசத்தின்போது திரௌபதி தாங்கள் அனைவரும் உண்டு முடித்தபின் அக்ஷய பாத்திரத்தைக் கழுவி வைத்து விட்டாள். ஒரு தடவை முற்றாகக் கழுவி வைத்து விட்டால், மறுநாள்வரை அக்ஷய பாத்திரத்தில் உணவு வராது. திடீரென, துர்வாச முனிவர் பதினாயிரம் சீடர்களுடன் பாண்டவர் குடிலுக்கு வந்து, "பசி வாட்டுகிறது! அனைவருக்கும் உணவு கொணர்க! நாங்கள் ஆற்றுக்குச் சென்று குளித்து வந்தவுடன் உணவு அளிக்க வேண்டும்" என்று கூறிச் சென்றார். அப்போது கண்ணன் அங்கே வந்து, "திரௌபதி! எனக்குப் பசிக்கிறது! உணவு வேண்டும்" என்றார். திரௌபதி என்ன செய்வது என்று அறியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்த சமயத்தில், திரௌபதி கழுவி வைத்த பாத்திரத்தை எடுத்த கண்ணன், அதன் மூலையில், பாத்திரம் சரிவர கழுவப் படாமல் ஒட்டிக் கொண்டிருந்த கீரை, இலை ஒன்றினை எடுத்து உண்டார். உடனே துர்வாசரும் அவரது பதினாயிரம் சீடரும், வயிறு முற்றும் நிரம்பி பெரியதொரு விருந்தை உண்ட மகிழ்வுடன் புறப்பட்டுச் சென்றனர்.*

*அந்தர் பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: என்று உபநிடதம் கூறுகிறது. அந்தப் பரமாத்மா*

ஒன்றே உலகில் உள்ள அத்தனை படைப்புகளிலும் உள்ளூடாக விரவியுள்ளது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. எல்லா உயிர்களையும் தன்னகத்தே ஒன்றாக இணைத்து நிற்பது ஆத்மாவே.

ஈசன் மதுரையில் நிகழ்த்திய திருவிளையாடல்களில் ஒன்று பிட்டுக்கு மண் சுமந்தது. தனக்கு இடப்பட்ட பகுதி வேலையைச் செய்யாமல் பொழுது போக்கிக் கொண்டிருந்த இறைவனை பாண்டியன் பிரம்பால் அடித்தான். இந்தப் பிரம்படி உலகில் உள்ள எல்லாப் பிராணிகள்மீதும் விழுகிறது. பாண்டியன் உட்பட எல்லாப் படைப்புகளும் வலியை உணர்கின்றன. உயிர்களிடையே நாம் காணும் வேறுபாடுகள் உண்மையில் இல்லை. இவை மாயையின் வேலைகள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஓர் அழகிய கதையைக் கூறுகிறார். சிறு குழந்தையான விநாயகர் கயிலை மலையில் ஒரு பூனையுடன் விளையாடிக் கொண்டு இருக்கும்போது, இவரது கூரிய நகம் பட்டு பூனை முகத்தில் கீறல் ஏற்பட்டது. பூனை ஓடிவிட்டது. விநாயகர் எழுந்து, ஜகன்மாதாவும் தன் தாயுமான பார்வதியைக் காணச் சென்றார். அங்கே தாயின் தாமரை போன்ற வதனத்தில் ஒரு நீண்ட கீறலைக் கண்டு, திடுக்கிட்டு, “தாயே! உன் முகத்தில் யார் இப்படிக் கீறியது?” என்று கேட்டார். தேவி சிரித்துக் கொண்டு, “குழந்தாய், என் முகத்தில் கீறியது வேறு யாரும் அல்ல. நீதான்” என்றார். அதிர்ந்து போன விநாயகர், அம்மா, உங்கள் முகத்தில் நான் கீறினேனா? மனத்தாலும் அப்படிச் செய்வதை நான் நினைத்துக் கூட பார்க்க முடியாது என்கிறார்.

“மகனே! நீ நேரடியாக என் முகத்தில் கீற வேண்டியது இல்லை. காலையில் அந்தப் பூனையின் முகத்தில் உன் நகக் கீறல் ஏற்பட்டது அல்லவா? எல்லா ஜீவராசிகட்கும் நானே மூலம். எல்லா உயிர்களின் தொகுப்பு நானே!



எனவே அந்தக் கீறல் என் முகத்தில் விழுந்தது" என்றார் ஜகன்மாதா.

ஞானியர் பலரும் புறத்தே ஏற்படும் மாறுபாடுகளில் மனம் திரும்பாது, அடிப்படை ஒற்றுமையில் மனம் பதிந்து இருந்தால், இந்த உண்மை தெள்ளெனத் தெரியும்.

ஊருக்கு வெளியே இருந்த ஆஸ்ரமம் ஒன்றில், ஒரு துறவியும் அவரது பல சீடர்களும் வசித்து வந்தனர். அவர்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் ஊருக்குள் வந்து இல்லங்களில் பிக்ஷை பெற்று வருவது வழக்கம்.

ஒருநாள் அங்ஙனம் பிக்ஷைக்குச் செல்லும்போது ஒரு செல்வந்தர் தன் வேலையாளை ஏதோ ஒரு சிறு தவறுக்காக கடுமையாகத் தடியால் அடித்துக் கொண்டிருப்பதை கண்டார். அதைக் கண்ட துறவி, செல்வந்தரிடம், "ஏன் இப்படி அடிக்கிறீர்கள்! அவன் செய்த மாபெரும் தவறுதான் என்ன? எதுவாக இருந்தாலும் இப்படி உதைப்பது தவறு" என்றார்.

செல்வந்தனின் சினம் முற்றிலும் இப்போது துறவிமீது திரும்பியது. "ஏய் போக்கிரி? நான் இவனை அடித்தால் உனக்கு என்ன வந்தது? நீ ஏன் தலையிடுகிறாய்?" என்று கூறி துறவியை நையப்புடைத்தார். அவர் நினைவிழந்து கீழே விழ, அவரை அப்படியே விட்டுவிட்டு செல்வந்தன் போய்விட்டான்.

துறவி இன்னும் திரும்பி வரவில்லையே என்று மற்ற சீடர்கள் அவரைத் தேடி வந்தனர். துறவி பெரும் காயங்களுடன் மயங்கிக் கிடப்பதைக் கண்ட சீடர்கள் அதிர்ந்து போய், அவரைத் தூக்கி வந்து ஆஸ்ரமத்தில் கிடத்தினர். காயங்கட்கு மருந்திட்டு சிறிது சிறிதாக பாலை வாயில் ஊற்றினர்.

*துறவி கண் விழித்தார். அவர்மீது அன்பு கொண்ட சீடர்கள், "குருதேவா? ஞான வடிவான உங்களை அடித்து யார்? அந்தக் கையை முறித்துப் போடுகிறோம்" என்றனர். அதற்குத் துறவி, "எனக்குப் பால் ஊற்றிக் கொண்டு இருக்கும் கைதான் என்னை அடித்தது" என்றார்.*

*வழக்கமாகத் தன்னை அடித்தவன் மீது கோபமும், தனக்கு மருந்திட்டு பால் அளித்தவன்மீது அன்பையும் காட்டுவது மனித இயல்பு. ஆனால் பிரம்ம ஞானிக்கு இவன்தான் அடித்தான், இவன்தான் பால் கொடுத்தான் என்ற வேறுபாடே இல்லாமல் மறைகிறது. தீங்கு விளைவித்தவனும், நன்மை செய்தவனும் உடலுக்குத் தானே அதைச் செய்தான்! அவருடைய ஆன்மாவுக்கு அதனால் எந்தத் தாக்கமும் இல்லை. அந்த ஞானியின் முனைப்பு முழுவதும் ஆன்மாவிலேயே ஊன்றி இருந்ததால் இவ்விரு செயல்பாடுகட்கும் அவருக்கு வேறுபாடே தெரியவில்லை.*

*நமது பகவானின் வாழ்க்கையிலும், ஆரம்ப காலத்தில் ஆஸ்ரமத்தில் வந்த திருடர்கள், அங்கே பணம் இருக்குமா என்று தேடி, அங்கே ஒன்றுமே இல்லாததால் சினம் கொண்டு பகவான் உட்பட அனைவரையும் தாக்கினர். திரும்பத் தாக்க முற்பட்ட ஆஸ்ரமவாசிகளை, பகவான் தடுத்து, "அவர்கள் எனக்கு பூஜை போட்டு முடித்து விட்டார்கள்! அவர்களைப் போக விடுங்கள்!" என்றதே ஜீவஆத்ம ஐக்யத்தின் மிக அண்மை வெளிப்பாடு அல்லவா!*

**ரமணோதயம்**

Voluntary Services

K. *சுரேஷ் ஜானகிராமன்* *9444127770*

*ராஜேஷ்* M.S. *9840075778*

# சுவாமினி ஆத்மானந்தா 2

## வி. நிரஞ்சன்

*சொல் மானத தனுவின் கன்மாதி சிறிதின்றிச்*
*சும்மா அமர்ந்திருக்க அம்மா அகத்தில் ஆன்ம சோதியே*
*நிதானு பூதியே இராது பீதியே இன்ப அம்போதியே*
*– பகவான் ஆன்மவித்தைக் கீர்த்தனம் - பாடல் 4*

ப்லாங்கா பகவானின் சன்னிதியில் மனத் தெளிவு அடைந்தார். பகவானின் உபதேசங்களின் உட்கருத்து மனோநாசமே மெய்ஞானம் என்பதே என்று தெளிவானார். மன வாக்கு காய கன்மம் அறவே அற்றுச் சும்மா இருப்பதுவே சாதனை என்று அறிந்தார். மனம் ஒழிந்த இடத்தில் ஒளிர்வது ஆன்ம சோதி, சொருப ஞானம் அதுவே. அதுவே நித்திய இன்பக் கடல் என்றும் உறுதி அடைந்தார். குரு அருள் என்பது தானே என்றும், தன்னைத் தனக்குக் காட்டுவதே வெளிமுகமாய்த் தோற்றி குரு அருள் செய்தல் என்றும் புரிந்துகொள்கின்றார். ரஜோ தமோ குணங்களால் ஆக்கப்பட்டிருக்கும் அசுத்த அகந்தையை நீக்கி சுத்த அகந்தையாக, சத்வ மனமாக மிகுந்திருக்கும் சாதனையே இனி செய்யவேண்டிய தபசு என்று தெளிவடைகின்றார். பகவானது சன்னிதியில் சாதனையைத் தொடரும் விருப்புடனேயே வாரணாசி செல்கின்றார்.

ஆனால் அவருடைய வாழ்வில் அக்கால கட்டத்தில் அவர் பலவித சோதனைகளைக் கடக்க வேண்டியவரானார். இரண்டாவது உலகப் போரின் உச்சகட்டத்தில் ஜெர்மானியர்கள் கட்டவிழ்த்த யூத இனப் படுகொலையில் அவரது பாட்டியை இழந்தார். அவரது தந்தை பல இன்னல்களுக்கு இடையில் அமெரிக்காவிற்குத் தப்பிச் சென்றாலும் சில மாதங்களில் அவர் அங்கே மரித்துவிடுகிறார். உறவு என்று




ஆனந்தமயிமா

சொல்லிக்கொள்ள ஜெர்மனியில் யாரும் இல்லாது போனாலும், ஜெர்மானியர்களாலேயே அவரது யூத இனத்தவர் படு கொலை செய்யப்பட்டு வந்த தாலும், இந்தியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த பிரிட்டிஷ் அரசு அவரை ஜெர்மானியக் குடியாகவே பார்த்து அவரைப் பகை நாட்டவராகக் குறியிட்டு, அவர் வாரணாசியில் இருந்து வெளியே செல்வதற்குத் தடை விதித்திருந்தது. அவர் இருந்து வந்த ஜே.கே பள்ளி வளாகத்தில் இருப்பதற்கும், சற்றே அக்கம் பக்கத்தில் சென்று வருவதற்கும், மட்டும் அனுமதித்தது பிரிட்டிஷ் அரசாங்கம். இதனால் அவர் பகவானிடம் திரும்பி வருவதற்குத் தடை ஏற்பட்டது.

ஆனால் அவரது நல்வினைப் பயன் அவரை வழி நடத்தி இறுதி வரை அவரைக் காத்து அருள் செய்ய குரு ஒருவர் ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டிருந்தார். அகந்தையின் வலியால் சாதிக்க முடியாதது எல்லாம் ஆன்ம சமர்ப்பணத்தின் வாயிலாகவோ, நடப்பதை காலத்தின் கட்டாயம் என்று மனம் சம்மதித்து சாந்தம் அடைவதாலோ, நிகழ்வது வியப்பிற்குரியதன்று நம்பற்குரியது. குருவருளும் புண்ணிய பலனுமே காரணம் என்பதை பக்குவிகள் ஒப்புவார்கள்.

ப்லாங்கா ஜே.கே பள்ளியில் வேலை பார்த்து வருகின்றார். எளிய வாழ்க்கை. பள்ளியிலிருந்து பெறும் ஊதியம் மட்டுமே அவரது வருமானமாய் இருந்தது. அது அவருக்குப் போதுமானதாக இல்லாவிட்டாலும் மன நிறைவோடேயே இருந்தார். அவர் இந்தியாவிற்கு வந்தது அவரது தேடலின், சாதனையின், பொருட்டே. ஆதலால் குறைவிலும் நிறைவுகண்டு, ஆன்மிக சாதனையிலேயே முனைந்திருந்தார்.


சுவாமினி ஆத்மானந்தா

அவர் இளம் வயதிலேயே ஐரோப்பிய இசையைக் கற்றுத் தேர்ந்தவராய் இருந்தார். அவரது தந்தை அதற்கான வசதிகளை எல்லாம் செய்து கொடுத்திருந்தார். அவருடைய இசை ஞானமும் இசைக் கருவிகளை அவர் வாசிக்கும் திறமையும் அவருக்கு உயர்ந்த வாய்ப்பை நல்கியது. தில்லியில் ஐரோப்பிய இசையின் இயக்குனராக செயல்படுவதற்கான அழைப்பு அவருக்கு வந்தது.

அத்தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதன் மூலமாக அவரது வருமானம் அதிகமாகும். ஆனால் அவரை அறியாமலேயே தபோசித்தம் அவரிடம் வலிமையாக இருந்தது. ஜே.கே அடிக்கடி சொல்வது இங்கே நினைவு கூரலாம். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பதுவே ஜீவனுக்கு அடிப்படைத் தேவை. பிற தேடல்கள் தேவை அற்றவை. அவை அனைத்தும் இச்சையின் விருத்திகளே. ப்லாங்கா இதை முற்றிலும் திடமாக உணர்ந்திருந்தார். ஐரோப்பிய இசையின் இயக்குனராகச் செயல்படுவது அவருக்குப் பேரையும் பொருள் வளத்தையும் தரும். ஆனால் அந்தப் பொறுப்பு அவரது முக்கிய குறிக்கோளுக்கு பெரும் தடையாய் இருக்கும், மெய்ப்பொருளை நோக்கி உள் முகமாகிவிடத் துடிக்கும் அவரது கவனத்தை வெளிமுகப்படுத்திவிடும் என்று கருதி அந்த அழைப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை. இதுதான் பக்குவம். இந்தப் பக்குவம் இருந்தால் குருவானவர் சாதகனை நோக்கி வந்துவிடுவார். குருதான் கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுபவர் ஆயிற்றே.

ப்லங்காவை முதலில் வழிப் படுத்தியவர் டேனிஷ் நாட்டைச் சேர்ந்த சோரென்சென் என்பார். இவர்களது

*சந்திப்பில் கூட பகவானது அருள் வெளிப்படுகின்றது. இவர் ரவீந்திரநாத் தாகூரால் இந்தியாவிற்கு அழைக்கப் பட்டவர். இவரும் பகவானை நேரில் கண்டு தனது சூன்ய மன நிலையை விளங்கிக் கொள்ள வருகின்றார். இவரை பகவான் பிறவியிலேயே சூனிய மனதோடு பிறந்தவர் என்று குறிப்பிடுகின்றனர். பிறவிச் சித்தர் என்றே கூறலாம். இது காரணமாகவே இவர் சூன்யதாவாக அறியப்படுகின்றார். அவர் பகவானுடைய சன்னிதியில் தன் நிலை குறித்த உறுதி அடைகின்றார்.*

*ஸ்வீடன் அரச குடும்பத்தைச் சேர்ந்த பியர் ஏ வெர்டின் என்னும் அதி பக்குவியான யோக சாதகரை பகவான் ரமணரிடம் சேர்ப்பித்தவரும் இவரே. அந்த ஸ்வீடிஷ் சாதகர் தான் பகவானின் சன்னிதியில் ஒரு மண்டல யோக சாதனையின் நிறைவாக ஆன்ம சாக்ஷாத்கார அனுபூதி பெற்றார். பகவானது மகா நிர்வாணத்தின் பின்னும் பகவானால் ஒரு காட்சியின் மூலமாக வழி நடத்தப்பட்டு, மதுரைக்கு அருகில் உள்ள சிறுமலைச் சாரலை அடைந்து, அங்கே குடில் அமைத்து, ஆன்ம நிலையில் திரம் பெற சாதனையில் ஆழ்ந்தார். இளம் வயதிலேயே யோகமும் ஞானமும் கூடிய விழிப்புடன் விதேக முக்தி அடைந்தவர்.*

*சூன்யதா, ப்லாங்காவின் புனித தேடலை நன்கு அறிந்தவராக, அவரிடம் ஆனந்தமயிமாவைப் பற்றிக் கூறி அவரை வழிப்படுத்துகின்றார்.*

*ஆனந்தமயிமா பிறந்த இடம், இன்று பங்களா தேஷில் இருக்கும் கியோரா என்னும் குக்கிராமம். இறை வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட எளிமையான அந்தணர் குடும்பம். பெற்றோர் இட்ட பெயர் நிர்மல சுந்தரி தேவி என்பது. இளம் வயதிலேயே அவர் இதயம் குளிர்ந்தவராய் இருந்தார். தனித்து இருப்பதில் விருப்பம் கொண்டவர். பிற பிள்ளைகளைப்போல் பரபரப்பு, விளையாட்டு, பகைத்துக் கொள்ளுதல் என்று அவரது மனம் சஞ்சலிக்காது தனித்து மன நிறைவோடு இருந்து வந்தார். அவர் மன ரீதியாகப் பின்தங்கி உள்ளாரோ*

என்று பெற்றோர் சற்றே கவலை கொள்ளும் அளவிற்கு அவர் பொறுமையாய் இருந்தார். உண்மையில் பிறவியிலேயே தன்மய ஆனந்தராய் இருந்திருக்கின்றார். ஆனால் அவருடைய நிலை இன்னது என்று அவருக்குத் தெரியாமல் இருந்தது.

இளம் வயதிலேயே திருமணம் நடந்தது. அவருக்கு அப்போது வயது பதின்மூன்று. அவரது பதினெட்டாவது வயதில் அவரது கணவரோடு அவர் வாழ்க்கை துவங்குகின்றது. ரமணி மோகன் என்னும் அவரது கணவர் துவக்கத்திலிருந்தே மாதாவினுடைய தனித்துவத்தின் புனிதத்தை உணர்ந்து கொண்டார். மாதாவின் பக்தர்களில் ஒருவரானார். சிறிதுகாலம் கழித்து அவர் மாதாவிடம் சன்னியாச தீக்ஷை பெற்று போலோநாத்ஜி என்ற நாமத்துடன் தனது வாழ்நாள் வரை மாதாவின் முக்கிய சீடராகவும் பாதுகாவலராகவும் இருந்து வந்தார். எளிமையே உருக்கொண்ட மாதாவும் தனது கணவருக்குச் செய்யும் பணிவிடைகளையும் மரியாதைகளையும் குறைவின்றிச் செய்துவந்தார். கணவன் மனைவி என்றில்லாமல் குருவும் பக்தரும் ஆகவே இருந்தனர்.

இக் காலகட்டத்தில் ஆனந்தமயிமாவிற்கு ஒரு புதிய அனுபவம் நிகழ்ந்தது. உள்ளிருந்து ஒரு சக்தியின் உந்துதலாக எண்ணங்களோ செய்திகளோ காட்சிகளோ வெளிவரலாயின. இதை கெயாலா என்கின்றனர் மாதா. அவரது விருப்பமில்லாமலே வருவதும் அல்லது அவரே விரும்பி வருவதும் ஆக இந் நிகழ்வு இருந்தது. முதல் அனுபவத்தில் ஒரு சாதகியாக இருந்து குருமுக தீக்ஷை பெற்று பல கட்டங்களாக முன்னேறி சாதனையின் நிறைவு நிலையை அடைவது போலாக ஒரு அனுபவம் நிகழ்கின்றது. இவ்வாறாக பல நிகழ்வுகளின் மூலமாக பல சாதனை முறைகளும் பல சாத்திரங்களின் கடினமான உட்கருத்துக்களும் அவருக்குத் தெளிவாக்கப்பட்டன. குறைந்த அளவே அவரது பள்ளிப் படிப்பு, ஆன்மிகத்தில்

*ஒன்றை அடையவேண்டும் என்கின்ற குறிக்கோளுடன் ஏதொரு சாதனையும் பயின்றிலர், குருவென யாரையும் அடைந்திலர். ஆனால் கெயாலா நிகழ்ச்சிகளின் பின்பு அனைத்து மார்க்கங்கள் பற்றியும் அனைத்துக் கோட்பாடுகள் குறித்தும், அனைத்து நம்பிக்கைகள் குறித்தும் அவர் தெளிவான விளக்கங்களை உள்ளங்கை நெல்லிபோல வெளிப்படுத்தியது கண்டு பண்டிதர்களும் குருமார்களும் சமயத் தலைவர்களும் வியந்தனர். குணப்படுத்தும், குறை தீர்க்கும், சுகம் நல்கும் மாதாவின் அருட் பார்வைக்கு ஏராளமானோர் ஈர்க்கப்பட்டு பயன் அடைந்தனர். அந்த ஆன்ம வலி மிகுந்த அன்னையின் பால் ப்லாங்கா ஆற்றுப்படுத்தப் படுகிறார்.*

# ரமணநிலை

## வித்யாசங்கர்

*தசைச் சுடும் சுடர் நிலை*
*மூவாசை இலா முழு நிலை*
*இசை பாட மௌன நிலை*
*அசையா மலை ரமணநிலை.* **(1)**

*யான் எனக்கு எனதிலா நிலை*
*நானார் பதிலாய் நிற்கும் நிலை*
*தானாய் மிளிரும் தனி நிலை*
*நானின் நானாய் ரமணநிலை* **(2)**

*நன்னினிமை எனும் சுக நிலை*
*கண்ணிமையாய் காக்கும் நிலை*
*எண்ணில் அடங்கா ஒரு நிலை*
*அன்னியமிலா ரமண நிலை* **(3)**

*விபக்தியால் தேட பக்தி நிலை*
*பக்தியால் கரையும் கரு நிலை*
*பக்தியில் ஒடுங்கும் ஏக நிலை*
*பக்தியே முக்தியெனும் ரமணநிலை* **(4)**

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மூலம்: மௌனிசாது

## தமிழாக்கம்: ராம்மோஹன்

### 23. மீண்டும் தரிசனம்

அது காலை தியான நேரம். ஆலயம் முற்றிலும் சாதகர்களால் நிறைந்து இருந்தது. இதுவரை நான் பார்த்திராத, இந்தியர் மட்டுமன்றி வெளிநாட்டு முகங்களையும் நான் காண்கிறேன். பாரத நாட்டின் விசித்திரமான சூழ்நிலையில் தன் பருவுடல் நீத்த ஞானியைச் சூழ்நிலைப்போரின் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. கூடத்தில் சூழ்ந்திருந்த ஒவ்வொருவரின் மன ஓட்டத்தையும் என்னால் உய்த்துணர முடிந்தது என்றால் மிகையாகாது. ஆனால் இத்தகுகு ஆர்வத்தினால் உந்தப்பெறும் சோதனைகளைச் செய்ய இந்தப் புனிதத் தலத்தில் ஈடுபடுவது தவறல்லவா? அது ஓர் அவச் செயல்.

ஒன்றைத் தெளிவாக அறிந்தேன். நாங்கள் ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்குத் தக்கபடி மகரிஷியிடமிருந்து விடை பெற்றோம். அது எத்தகையது என்பது ஒரு தேவையற்ற ஆய்வு. பகவான் திருவடிக்குக் கீழ் நாம் அனைவருமே மௌனத்துடனும், பெருமதிப்புடனும் ஒன்றி உள்ளோம்.

என் அருகில், ஓர் வயது முதிர்ந்த ஐரோப்பியர் ஒரு நீல வண்ணக் கால் சட்டையுடனும், சட்டையும் மட்டுமே அணிந்து கழுத்தில் ஒரு ஜபமாலையுடன் அமர்ந்து

இருப்பதைக் கண்டேன். அவர் இந்தியாவிலேயே நீண்ட காலம் கழித்தவராக இருந்திருக்கலாம். ஏனெனில் அவரது மேல்தோல் வெயில் பட்டதால் காரணமாக பழுப்பு நிறம் அடைந்து இருந்தது. அவரது மெலிந்த சோகம் சார்ந்த வதனத்தில் நெருக்கமாக வெட்டப்பட்ட சிகையும், மீசையும் அலங்கரித்தன.

பகவானது தோற்றத்தினை தனது மனத்தில் செதுக்கி வைக்க முயல்வதுபோல, அவர் பகவானின் திருமுகத்தையே இடையறாது நோக்கிக்கொண்டு இருந்தார். சத்குருவின் பௌதிக எழிலை, தன் கண்களால் காண்பது இதுவே இறுதித் தருணம் என்பதை உணர்ந்து, அதனையே அவர் ஒரு நிமிடமும் விடாது நோக்குவதுபோல் இருந்தது அவர் நோக்கு. இரண்டு நாட்கள் கழித்து, அவர் திருவண்ணாமலையை விட்டு நீங்கினார். பின்னர் நான் அவரைக் காணவே இல்லை. உணவு வேளையின்போது, அவர் கூடத்தின் கோடியில் போய் அமர்ந்திருப்பார். அவர் தன்னுடைய கரண்டி, தட்டு, முள் கரண்டி அனைத்தையும் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, மிகக் குறைந்த உணவு வகைகளையே உண்டார். என்னைப் போலவே அவரும் தனக்காகப் பால் கேட்டு வாங்கி அருந்துவார்.

ஆச்ரமத்தைச் சார்ந்த பிரம்மச்சாரிகளுடன் யோகி ராமையா சற்றும் விலகாத தியானத்துடன் கல்லில் செதுக்கப்பட்டது போன்று, உணர்வு வெளிப்படாத முகத்துடன் பகவான் திருவடியின்கீழ் அமர்ந்து இருந்தார்.

எனக்கு எதிரே அமர்ந்திருந்த ஒரு மூதாட்டி, எல்லையற்ற பக்தியுடன் பகவானையே தீவிரமாக நோக்கிக் கொண்டு இருந்தார். இன்னும் சில நேரத்தில் பகவானைப் பௌதிக உருவில் காண முடியாது என்னும் நிதர்சனத்தை ஏற்றுக் கொள்ள இயலாது அவரது மனம் குழப்பிக் கிடப்பதை அவரது கண்கள் வெளிப்படுத்தின.

*பகவானின் நிலை என்ன? இந்த சமீபத்திய அறுவை சிகிச்சைக்குப் பின் அவர் இன்னமும் பலவீனமாகக் காட்சி அளித்தார். அவரது உடல், ஒளி, ஊடுருவிச் செல்வது போல் மெலிந்து இருந்தது. அவரது முகத்தின் நிறம் முன்னைக் காட்டிலும் வெண்மையாக இருந்தது. அவரது தோற்றமோ எனில் அவரை இந்த பௌதிக உலகுடன் தொடர்பு படுத்தவே முடியாது என்பதுபோல் திகழ்ந்தது. இது ஒரு சிலையா, அன்றி ஒரு நுண்மையான புலன்களைத் தாண்டிய ஒரு அமைப்பா – அவரது தோற்றத்தில் எல்லாவற்றையுமே காண முடியும். இல்லை, அது ஒரு பௌதிகத் தொடர்பே அற்ற ஒன்று. சிலகாலம் இவ்வுலகில் பொருண்மை நிலை அடைந்து பின்னர் தன்னுடைய பரம் நிலைக்கே திரும்பிய ஒன்று.*

*நாம் அவரது தேகம் என்று குறிப்பிடுவது எல்லாமே நம் வார்த்தைகட்கு அடங்காத அவரது நுண்மையான வடிவை, திறனற்ற சொற்களால் விவரிக்க முயலும் முயற்சியே.*

*அவரது ஆழ்ந்த மௌனம் நம்மைச் சுற்றி உள்ள அனைத்தையுமே ஊடுருவிச் செல்கிறது. இப்போது தீர்வுகாண முடியாத பிரச்சினை எதுவுமே இங்கு இல்லை. முற்றுமை பெறாத ஆசைகள் எதுவுமே இல்லை. எனது சித்தத்தில் எந்த ஒரு அசைவுமே இல்லை. இப்போது எனக்கு, நான் சிந்தித்து ஆராய வேண்டிய தேவையே இல்லை என்பது தெளிவானது. சிந்தனை என்பது தேவையற்ற மன ஓட்டம்.*

*இப்போது நான் எதைப்பற்றி சிந்திக்க வேண்டும். என்னுள் என்னதான் நிகழ்ந்து கொண்டு உள்ளது? நாம ரூபத்துடன் தன்னைத் தொடர்பு கொண்டுள்ள வியக்தி யார்? இப்போது இருப்பதெல்லாம் 'நான்' என்ற பரமபூர்ண சத் ஒன்றே. என்னால் இந்த உன்னத நிலையிலேயே நீடித்து, எத்தகைய தடைவரினும் இதிலிருந்து நழுவாத பொய்மைகள் நிறைந்த*

*என்னுடைய முந்தைய உலகில் விழாமல் இருக்க முடியுமா? காலம்-இடம் இவற்றைக் கடந்து நான்-நீ என்ற சுட்டேதும் இல்லாமல் இந்த ஆழ்ந்த மௌனத்திலேயே என்னால் தொடர முடியுமா?*

*என்னைச் சுற்றி இப்போது ஒளிவெள்ளம் பாய்ந்து கொண்டு இருக்கிறது. அனைத்துமே அவ்வொளி வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுகின்றன. எனது திறந்த கண்கட்குமுன் ஒளியைத் தவிர வேறு எதுவுமே காணவில்லை.*

*எனக்கு அந்நியமாய்த் தோன்றும் இந்த உருவம், மூச்சு விடுவதாகவே தோன்றவில்லை. ஒருவேளை எல்லையற்ற அமைதிப் பேருண்மையை இதன் சுவாசம் சிறிது பாதிக்குமோ? யான் அறியேன்.*

*இந்தப் பேரருளாம் ஜோதிக்கு முன்னர் கடந்த காலம், எதிர்காலம் என்னும் காலவரையறைகள் அனைத்தும் மறைகின்றன. அவை குன்றுகள் மறைத்த சமதளம் போல் உள்ளன. இதுவும்கூட உண்மையல்ல. இந்த ஆன்மிக வாயில் திறக்குமுன் ஏற்பட்ட தற்காலிக வியப்புணர்வு இப்போது மறைந்து, காலம் என்பதே உண்மையில் இருப்பற்ற ஒன்று என்ற மகிழ்ச்சிதரும் ஞானத்தை காட்டுகிறது. தூய யோவானின், இதற்கு பின்னர் காலம் என்பதே இல்லை என்ற சுவிசேஷ வாசகம் ஒரு மின்னல் கீற்றுபோல் என் ஞாபகத்தில் துளிர்க்கிறது.*

*ஆம், உண்மையில் வாழ்க்கை என்பது காலம் கடந்த ஒன்று என்றும், நாம் கால அளவையின் பிடியில் சிக்கிக் கொண்டு இருந்தோமாயின் அது உண்மையான வாழ்க்கை அல்ல என்பதையும் இப்போது நான் உணர்கிறேன். இங்குப் பரவி நிறைந்து இருக்கும் கண்பார்வைக்குப் புலனாகாத ஆன்மிகப் பேரொளியில், இதுவரை எனக்குப் புலனாகாத ‘உயிர்த்தெழுதல்’*

*என்பதின் ரகசியம் முற்றிலும் அறிய வந்தது. இங்கே, இப்போது ஒவ்வொன்றும் மற்றொன்றுடன் முழு நல்லிணக்கத்துடன் அமைந்துள்ளது. நாம் இதயத்தில் காணும் இப்பேருண்மையை வார்த்தைகளால் விவரிக்க ஒண்ணாது. நம் மூளையில் பதிந்திருப்பதெல்லாம் சிறு சிறு துண்டுகளே. இவை உணர்வு என்னும் ஊடகம் வாயிலாக ஒன்றிணைக்கப்பட்டு, எண்ணங்களாகவும் வார்த்தைகளாகவும் வெளி வருகின்றன. ஆயினும் 'நாம்' என்னும் அஹங்கார வ்ருத்தி அங்கே இல்லை.*

*எவ்வளவு நேரம் இந்தப் புதிய உணர்வு நீடித்தது என்பதை நான் அறியேன். ஏனெனில் இவ்வுணர்வை மணித் துளிகளால் அளவிட இயலாது. அதனை அளவிடும் எண்ண ஓட்டமும் அங்கில்லை. ஏதேனும் ஒரு சிறு எண்ணத் துளையை நான் மனதில் நுழைய அனுமதித்தால் நான் இவ்வுணர்வு நிலையில் இருந்து நழுவி விடுவேன் என்பதை என் உள்ளுணர்வு எனக்குக் கூறியது. எனவே என்னை இப்பர உணர்வு நிலையில் இருந்து நழுவாமல் இருக்கத் துணை புரியுங்கள் என்பதே என் பிரார்த்தனையாய் உள்ளது. எனினும் பின்னர் நினைத்துப் பார்க்கும்போது இந்தப் பேருணர்வே என் மனத்திரையில் மீண்டும் கொண்டுவர இயலவில்லை. ஒருவேளை மனத்திற்கும், உள்ளுணர்வுக்கும் இடையிலான பாவமே சிதைக்கப்பட்டு இருக்கலாம்.*

★ ★ ★

*நான் கூடத்தில் உள்ள தூண் ஒன்றின் அருகில் அமர்ந்து என்னைச் சுற்றியுள்ள அனைத்தையுமே வியப்புடன் நோக்கிக் கொண்டு இருந்தேன். எனது முதல் எண்ணமே இப்போது நான் அனுபவித்த இந்த ஆழ்ந்த மௌனத்தில் நான் மீண்டும் மூழ்க இயலுமா? அல்லது இந்தப் பேருண்மைக்கு என்னை நடத்திச் சென்ற பாதையை நான் மறந்து விடுவேனா? என்பதே. எனினும் என் மனது தனது வழக்கமான*

*விழிப்பைப் பெறவில்லை. எனக்கும் அந்த லோகாயத விழிப்பிற்கு மீண்டும் திரும்ப பெரிதும் ஆர்வமில்லை. அச்சமயம், ஊதுபத்தியின் நறுமணப் புகையில் இருந்து பகவானின் திருமுகம் என் கண் முன்னே விரிந்தது. அந்தக் கண்களின் தொலைநோக்கு அசையாப் பார்வை அப்படியே இருந்தது. ஒரே ஒரு வேறுபாடு. அதேசமயம் அக் கூர்விழிகள் என் ஆழ் உள்ளத்தினையும் ஆய்ந்து நோக்கிக் கொண்டு இருந்தன. நான் சில மணித்துளிகட்கு முன் எந்நிலையில் ஆழ்ந்து இருந்தேன் என்பதை அவர் அறிந்துள்ளார். பகவானைத் தவிர வேறு யாரால், நம் ஆழ்மனத்தின் அந்தரங்கத்தில் நுழைந்து நம்மைப் பற்றி முற்றிலும் அறிய முடியும். பகவானின் நிரந்தரமான ஆன்மிக இருப்பிடத்தில், என்னையும் சில நேரம் விருந்தினராக இருக்க அவர் ஆசிர்வதித்துள்ளார்!*

*இப்போது ஒரு மௌனமான ஆழ்ந்த பிரார்த்தனை என் முழு இருப்பினின்றும் வெளிப்படுகின்றது. பகவானே! என்னை முற்றிலும் அவ்விடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்! உங்களது சாந்நித்யத்தில் நான் எப்பொழுதும் இருக்க அருள் புரியுங்கள்! இந்த மாயா உலகத்தில் நான் இன்னமும் இருக்க விரும்பவில்லை. மரணத்தின்மூலமே நான் அங்கே வரமுடியும் என்றால் அதையும் நான் ஏற்று மரண வாயிலில் நுழைய விரும்புகிறேன்!*

*அவர் என்னுள்ளே ஆழ்ந்து நோக்கிக்கொண்டு இருக்கிறார் என்பதை நான் உணர்கிறேன். அவரது ஒளி வீசும் கண்களில் என் வேண்டுகோளுக்கான விடை தெரிகிறது. என்னுடைய குழந்தைத்தனமான கூக்குரல் அமைதியுற்றது. எது நடக்க வேண்டுமோ அதுவே நடக்கும் என்று நான் அமைதியுற்றேன். எனக்கு எது நல்லது என்பதை பகவான் அறிவார் என்று நான் உறுதி பெற்றேன்.*

*ஒரு காய் கனியக் கால அவகாசம் தேவை என்பதுபோல் ஒரு சாதனையும் கனிந்து வர தக்க தருணம் தேவை. அது வரும்போது, ஒரு புழு வண்ணத்துப் பூச்சியாக உருபெருகின்றது.*

★ ★ ★

*மணி அடிக்கும் ஒலி காதில் விழுகிறது. பகவான் தனது அணுக்கத் தொண்டர் உதவியோடு எழுந்திருந்து கதவை நோக்கிச் செல்கிறார். அமர்ந்திருந்த அனைவருமே எழுந்திருக்கின்றனர். பகல் உணவு நேரம் வந்து விட்டது.*

*பௌதிக உலகில் முழு சமத்துவம் என்ற நியதியை எப்போதும் உறுதியாகக் கடைப்பிடிக்கிறார். இந் நியதியின் ஒரு வெளிப்பாடே போஜன சாலையில் உணவு உண்ணும் அனைவருக்கும் தரப்படும் சரிசமமான உணவு. உணவுக் கூடத்தில் அமர்ந்திருப்போரில் சிலசமயம் சிறிது குறைந்த அளவில் உணவு பரிமாறப்படுவதைக் கண்டவுடன் பகவான் தானே பணியாளரை அழைத்து அதைச் சீராக்குவதை நானே பலமுறை கண்டுள்ளேன்.*

*என்னுடைய அனுபவத்திலேயே நான் இதைக் கண்டுள்ளேன். ஒருநாள் காலை, வழக்கமான இட்டிலி பலகாரத்துடன் வாழைப்பழம், சில ஆரஞ்சு சுளைகள், ஒரு ஆப்பிள் துண்டு போன்றவை பரிமாறப்பட்டு இருந்தன. இலைகளில் பரிமாறப்பட்டு இருப்பதைக் கண்ட பகவான் தனது வழக்கமான மௌனத்தில் இருந்து நீங்கி, கடுமையான தொனியில் பரிசாரகரை அழைத்துக் கூறினார். அப்போதுதான் பகவான் ஆச்ரமத்தில் வசிப்போர் அனைவருக்கும் காட்டும் பரிபூரண சமத்துவம் புரிந்தது. அந்தப் பரிசாரகர், பகவான் அவரிடம் கூறியதைக் கேட்டு, ஓடிவந்து என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, என் இலையைத் தூக்கிக் கொண்டு பகவானிடம் ஓடினார்.*

*ஏன் இவ்வாறு செய்கிறார் என்று எனக்கு முதலில் புரியவில்லை. என்னைப் பார்த்தால், பகவான் தன் இலையில் உள்ள பழத் துண்டுகளையும், என் இலையில் உள்ள பழத் துண்டுகளின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்து என்னை விட அவருக்கு அதிகமாக ஒன்றும் வைக்கவில்லை. இரண்டுமே சமமாக உள்ளது என்று தானே உறுதி செய்து கொண்டபின் மீண்டும் புன்னகை வதனத்துடன் என் இலையை என்னிடம் திருப்பி வைக்கும்படி கூறினார். இங்ஙனம் மிக உயரிய பகவான் நியாயஸ்தலத்தில் அனைவருமே சமம் என்று உணர்த்தப்பட்டபின், பரிசாரகர் என் இலையை என்னிடமே கொண்டு வந்து வைத்தார். இந்தச் சிறு காட்சியைக் கண்டிராதவர்க்கு பகவானின் இந்த சமத்துவ தரிசனம் புரிந்திருக்காது. பகவானுக்கு மனித மனத்தின் முழுமனமும், அதன் குறைபாடுகளும் உணர்ச்சிபூர்வமான பலவீனங்களும் நன்கு தெரியும். அதனால் சரியான தருணத்தில் சரியான மனோதத்துவ சிகிச்சையை அவர் அளித்து, சாதகர்களை முழுத் தகுதி உடையவர்களாக ஆக்குகின்றார். ஒரு மஹோன்னதமான ஆன்மிகக் குருவினால் காட்டப்படும் ஒரு மிகச் சிறிய செய்கைகூட நம்மைப் பண்படுத்தி, தூயவனாக்கும். அது பின்னால்தான் எனக்குப் புரிந்தது.*

பகவானின் வழக்கமான, எவரிடமும் வேறுபாடு காட்டாத, பேரன்பும், பேரருளும் கொண்ட செயல்கள் பகவானிடம் வரும் சாதகர்களுக்கு, குறிப்பாக சாதனையின் தொடக்கத்தில் ஒரு நாணத்தையும் அச்சத்தையும் உருவாக்கலாம். நமது உள்ளுணர்வு 'அந்த ஆத்ம சிகரம் எங்கே? நான் எங்கே?' என்ற தாழ்மை உணர்வை ஏற்படுத்தி, நம் முன்னேற்றத்தில் தடை செய்யலாம். ஆயினும் பகவான் இந்தத் தாழ்மை உணர்வும் அஹங்காரத்தின் வெளிப்பாடே என்று காட்டி, தனது செயல்கள் மூலம் நம்மை வழிநடத்துகிறார்.

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

*141. எள்ளகத்து எண்ணெய் இருந்ததனை ஒக்குமே
உள்ளகத்து ஈசன் ஒளி.*

*பொருள்: எள்ளுக்குள் எண்ணெய் நிறைந்து இருப்பதைப்போல் ஆன்மிக இதயத்தில் இறைவன் ஒளி உள்ளது.*

*விளக்கம்:*

*தேனுக்குள் இன்பம் செறிந்து இருந்தாற்போல
ஊனுக்குள் ஈசன் ஒளிந்து இருந்தானே*

*என்று இதே கருத்தைத் திருமூலரும் கூறுகிறார்.*

*நமக்குள் ஆத்மாவாக ஈசனே இருக்கிறான் என்று உறுதியாய் நம்பி, தியானிக்கும்போது, இதுகாறும் வெளிப்படாது இருந்த இறைத்தன்மை வெளிப்பட்டுப் பிரகாசிக்கிறது.*

*தலைசிறந்த சூஃபிக் கவிஞராகிய மஸ்தான் சாயபு இசைக்கும் கம்பீரமான பாடல்:*

*நாடாத பேர்கள் பயம்பயம் பயமென்ன
நம்பிய பேர்கள் ஜெயம்ஜெயம் ஜெயம் என்ன
தேடிவ பேர்கள் நயம் நயம் நயம் என்ன
திக்குத் திசை எங்கும் மிக்க ஒளிபரப்பி
ஒக்க உலகம் ஒரு கைக்குள் அடங்கும்
நம் பாழுத்தன் குணங்குடி.*

*இறைவனை நம்பாதவரை, உள்ளத்தே உயிர்ப் பயம் உள்ளது. நம்ப ஆரம்பித்தவுடன் வெற்றி, தோகை விரிக்கத் துவங்குகிறது. உடனே 'நான் யார்?' என்ற ஆன்ம விசாரத்தைத் துவங்குகிறோம்.*

*அப்போது பரமாத்மாவின் மேன்மை வெளிப்பட்டுப் பிரகாசிக்கிறது. அனைத்துமே நாம் என்ற சமஷ்டி உணர்வு பிரகாசிக்கிறது.*

***142.*** ***பாலின்கண் நெய்போல் பரந்துஎங்கும் நிற்குமே***
***நூலின்கண் ஈசன் நுழைந்து.***

*பொருள்: பாலில் நெய் உரைந்துள்ளதுபோல் சமய, ஞான நூல்கள் அனைத்திலும் உள்நுழைந்து இறைவன் எங்கும் பரவியுள்ளான்.*

*விளக்கம்: இதே கருத்தைத் திருமூலர் இன்னும் விளக்கமாகக் கூறுகிறார்:*

***அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்***
***எண்ணில் இருபத்துஎண் கோடி நூறாயிரம்***
***விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்***
***எண்ணி நின்ற அப்பொருள் ஏத்துவன்நானே.***

***– (திருமந்திரம், 58)***

*சிவபெருமான் ஞானியர் வாயிலாக அருள் உபதேசம் செய்த இருபத்துஎட்டு ஆகமங்களில் உள்ள பாடல்கள் இருபத்துஎட்டுகோடி லட்சம் பாக்களுக்கு இணையானவை. குருபிரான் வடிவாய் உள்ள அந்த சிவபிரானின் மாண்பினை அவ்வாகமங்களை ஆழ்ந்து கற்று அறிவதன்மூலம் போற்றுவோம்.*

*இந்த ஞான நூல்களின் ஆழ்ந்த மொழிச் சிறப்பினை மேலும் கூறுகிறார் நாயனார்.*

***அண்ணல் அருளால் அருளும்திவ்ய ஆகமம்***
***விண்ணில் அமரர் தமக்கும் விளங்கஅரிது (3)***

***அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடில்***
***எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. (7)***

*ஸத்குருவாம் சிவபிரான் அருளிச் செய்த ஞானநூல்களை நாம் ஒருமுக நோக்குடன் ஆழ்ந்து பயிலாவிடின் அவற்றை விளங்கிக் கொள்ளல் இயலாது. தேவலோகத்தில் வாழும் அமரர்கள் போன்று ஸதா*

*இன்பம் துய்ப்பதில் ஈடுபடுவோர்க்கு இஞ் ஞானம் அறிய வராது. இத்தகையோர்க்கு இஞ்ஞானம் அனைத்தும் நீரின்மேல் எழுதிய எழுத்துகள் போல, இதயத்துள் செல்லாது மறைந்துவிடும் என்கிறார் திருமூலர்.*

***143. கரும்பினில் கட்டியும் காய்பாலில் நெய்யும்***
***இரும்புண்ட நீரும் இயல்பு.***

*பொருள்: உலக மக்களில் மூன்று விதமான இயல்புகள் உடையவர் உள்ளனர். அவர்களைக் கரும்பினில் கற்கண்டு போலவும், சுடவைத்த பாலில் ஆடைபோலும், நன்றாகக் காய்ச்சிய இரும்புமேல் தண்ணீர்போலவும் ஒப்பிடலாம்.*

*விளக்கம்: ஞான நூல்களைக் கற்போரை மூன்று வகையாகப் பிரிப்போம். முதல் வகை, உத்தம சாதகர்: இவர்கள் ஞான நூல்களைக் கசடறக் கற்று, அவற்றின் உட்பொருளாகிய சத்தைப் பிரித்து எடுத்து, பக்குவப்படுத்தி உட்கொண்டு, தன்வயப்படுத்தி, பயனற்ற சக்கைகளை எறிந்து விடுவர்.*

*மத்திமர்: ஞான நூல்களைப் படித்து, ஸத்தாகிய உட்பொருளை புரிந்தவரை பிரித்து எடுத்து, தம் முயற்சிக்கு இயன்றவரை ஆத்ம முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொண்டு, கற்ற நூல்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பர். சத்தினைப் பிரித்த பின்னரும், மிகுதி உள்ள சத்தற்றவற்றையும் தமதாக்கிக் கொள்வர். காய்ந்த பாலில் நெய் ஆடையாக வெளிப்பட்டு வந்த பின்னர் அதனை உட்கொண்டு, மீதமுள்ள தயிரையும் உண்பது போன்றவர் இவர். எனவே இவர்களை 'காய்பாலில் நெய்' உண்பவர் என்கிறார்.*

*அதமர்கள்: ஞான நூல்களையே அறியாதவர்கள். அப்படியே எதேச்சையாக அவற்றைக் காண நேரிலும் அதனைப் பயன்படுத்த அறியாதவர். எப்படி பழுக்கக்*

*காய்ச்சிய இரும்பு, தண்ணீரைத் தெளித்தவுடன் எப்படி தன்னுடைய வண்ணத்தை இழக்குமோ, அதுபோன்று ஞானநூல்களை இவர்கள் தொடர்பு கொண்டாலும், ஞானத்தைக் கிரகித்துக் கொள்ள மாட்டார்கள்.*

***144.*** ***பழத்தில் இரதம்போல் பரந்துஎங்கும் நிற்கும்***
***அழுத்தினால் ஈசன் நிலை.***

*பொருள்: பழுத்த பழத்தை அழுத்திப் பிசைந்தால் இனிக்கும் சாறு வெளிப்படல்போல, அத்வைத நிலையை விரும்பும் சாதகன், பரமான்மா இதயக் குகையில் இருப்பதை அறிந்து ஸ்ரத்தையுடன் ஞான யோகப் பயிற்சி செய்ய, இறைஞானம் தானே வெளிப்படும்.*

***145.*** ***தனுவொடு தோன்றுமே தான் எல்லாமாகி***
***அணுவதுவாய் நிற்கும் அது.***

*பொருள்: ஞானவடிவாகிய இறைவன் ஒவ்வொரு உடலிலும், வ்யக்தியிலும், உள்ளும் புறமும் தானே நிறைந்து அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் எல்லாமாகப் பரந்து நிற்கும்.*

*விளக்கம்: அந்தர் யஸ்ய தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:*

*இறைவன் உள்ளும் புறமும் எங்கும் நிறைந்து நிற்கிறான் என்று மஹா நாராயண உபநிஷத் கூறுகிறது.*

*இதே கருத்தை,*

*கரந்த சில் இடம்தொறும் இடம் திகழ் பொருள்தொறும்*
*கரந்து எங்கும் பரந்து உளன்*

*என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் கூறுகிறார்.*

*பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்*
*பரந்ததோர் படரொளிப் பரப்பே*
*நீருறு தீயே நினைவதேல் அரிய*
*நின்மலா நின்னருள் வெள்ளச்*

*சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே*
*திருப்பெருந்துறையுறை சிவனே*
*ஆர்உற எனக்குஇங்கு ஆர்அயல் உள்ளார்*
*ஆனந்தம் ஆக்குமென் சோதி.*

*– (திருவாசகம், கோயில் திருப்பதிகம்-8)*

இறைவா! அனைத்துமே உன் வடிவம். தெளிந்த உள்ளத்தில் தேன்போன்று இனிமையாக அவன் குடி கொள்கிறான். அந்நிலையில் அவ்விறைவனைத் தவிர உற்றவர் வேறு யாரும் இல்லை என்கிறார் மணிவாசகர்.

யோக வாஸிஷ்டத்தின் தமிழ் மொழி மாற்ற நூலாகிய ஞான வாசிஷ்டமும் இக்கருத்தைத் தெளிவாக்குகிறது.

*என்னுடைய உடலில் சித்கதிராய் இலங்கும் தெய்வ 'நான்' என்ற*
*உன்னுமனம் கண்வாக்குக்களுடைய சக்தித் திரள் எல்லாம்*
*பின்னமின்றி நூல்களைப் பிரியா மகளிர் போல் நாளும்*
*துன்னும் என்று அநவரதம் தொடர் பாவனை செய்திடல் வேண்டும்.*

என்னுடைய உடல் நடுவில் இதயத்தில் சித்சக்தியின் ஒளிக்கதிராய் ஒளிர்வது நான் என்னும் உணர்வு. இதுவே சக்தித் திரள் ('ப்ரக்ஞான கனம்' என்று உபநிஷதம் மொழிவது). இந்த 'நான் யார்' என்ற விசாரணையை இடைவிடாது ஒரு பத்தினிப் பெண் கணவனை ஒரு சிறிதும் பிரியாது தொடர்வதுபோல் தொடர்ந்து 'ஸோஹம்' - 'நானே அது' என்ற பாவனையில் ஈடுபடுவாய் என்கிறார் வசிஷ்டர்.

திருமந்திரமும்,

*அணுவில் அணுவினை ஆதிப் பிரானை*
*அணுவில் அணுவினை ஆயிரம் கூறு இட்டு*
*அணுவில் அணுவை அணுக வல்லார் கட்கு*
*அணுவில் அணுவை அணுகலும் ஆமே.*

*அணுவிற்கும் அணுவாய் உயிர்க்கு உயிராய் நுண்ணியனாய் விளங்குபவன் பரமாத்மா. அவனே எல்லாவற்றிற்கும் தோற்றமாகிய முதற்பொருள். குருவின் திருவருள் கொண்டு, நுண்மையாய் 'நான் யார்' என்று தொடர்ந்து விசாரித்தால், ப்ரம்மத்துடன் ஒன்றுதல் கைகூடும் என்கிறார் திருமூலர்.*

***146.*** ***வித்து முளைபோல் விரிந்தெங்கு நிற்குமே***
***ஒத்துளே நிற்கும் உணர்வு.***

*பொருள்: இங்ஙனம் ஆத்ம சாதனை செய்யும்போது விதையிலிருந்து தோன்றும் முளைபோல் ஞானம் தோன்றி எங்கும் பரந்து ப்ரகாசிக்கும்.*

***147.*** ***அச்சம் ஆங்காரம் அகத்து அடக்கினால்பின்னை***
***நிச்சயமாம் ஈசன் நிலை.***

*பொருள்: அச்சத்தையும், தன்முனைப்பு எனும் அஹங்காரத்தையும் எங்கிருந்து இவை எழும்புகின்றன என்று மனதுள் ஆராய்ந்து அடக்கினால் அவை ஞானம் என்னும் அக்கினியில் எரிந்துபடும். அப்போது நம்முடைய ஈஸ்வரத் தன்மை (நான் பிரம்மம் என்பது) இதயத்தே ஒளியிடும்.*

***148.*** ***மோட்டினீர் நாற்ற முளைமுட்டை போலுமே***
***வீட்டுளே நிற்கும் இயல்பு.***

*பொருள்: சாதகன் முழுப்பக்குவம் அடையாதவரை அவனுள்ளே உள்ள பரம்பொருள் முட்டைக்குள் இருக்கும் உயிர் போலவும், விதையில் இருக்கும் முளை போலவும் வெளிப்படாமல் இருக்கும்.*

*சாதகன் பக்குவம் அடையும்போது, உயர்ந்த மேட்டு நிலத்திலிருந்து நீர் விரைவாகவும், முழுமையாகவும் இறங்குதல்போல், ஞான வெள்ளம் பிரவஹிக்கிறது. சித்தாந்தத்தில் இது 'சத்திரிபாதம்' எனப்படும். பௌத்தமதம் இதனை 'ஸடோரி' என்று கூறுகிறது.*

*சிவயோகத்தில் இதை விளக்கும்போது நிலத்திலிருந்து நீர் கலந்து, விதையானது, இரு பக்கமும் விரிந்து, அதன் மத்தியில், உயிர் கொண்ட முளை வெளிப்படுதல்போல, சிவம் ஆனது சேர்ந்து இருக்கும் சூரிய-சந்திர கலைகள் ஆகிய மண் சக்தியின் தொடர்பால், கலைகளாகப் பிரிந்து ஆன்ம ஜோதி வெளிப்படும் என்று கூறுப்படுகிறது.*

*முட்டை என்னும் உதாரணத்தை விளக்கும்போது சிவயோகத்தை விளக்கும் உரையாளர், சூட்சுமமான நாதம், பிந்து என்றும் கலைகள், ஜீவனில் மலரில் இருந்து நறுமணம் வெளிப்படுவதுபோல் ப்ரணவ ஒலியிலிருந்து சிவம் வெளிப்படுகிறது.*

*விளக்கம்:*

*சத்தமும் சத்த மனமும் மனக் கருத்து*
*ஒத்து அறிகின்ற இடமும் அறிகிலர்*
*மெய்த்து அறிகின்ற இடம் அறிவாளர்க்கு*
*அத்தன் இருப்பிடம் அவ் இடம் தானே.*

*கண், மூக்கு, மெய், செவி, மெய் என்கின்ற அறிதற்குரிய கருவிகளான இந்திரியங்கங்கள் இங்கே 'சத்தம்' எனப்படுகிறது. அந்த ஒலியை வெளிப்படுத்தத் துணை புரியும் மனமும், அம்மனக்கருத்து ஒத்து அறிகின்ற புலன்களும், எவ்வாறு ஒன்றை ஒன்று ஒத்து சிவன் அருளால் இயங்குகின்றன என்பதனை சிவயோகத்தின் மூலம் அறிபவர்க்கு அந்த ஞானமே இறைவனாய் அகத்தே ஒளிரும்.*

*இருந்து சிவனருளால் வெளிப்பட்டு*
*சிவஞானம் கைகூடுகிறது என்கிறார்.*

*149. நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனாய் நிற்கும்*
*அனைத்துஉயிர்க்கும் தானாம் அவன்.*

*பொருள்: எல்லார் இதயத்துள்ளும் 'நான்-நான்' என்று அறிந்துகொண்டு இருக்கும் ஆத்மா தீவிர சாதகர்*

*உணர்வுக்குள், தூய்மையாக, ஒளிவீசிக் கொண்டு இருக்கும்.*

*விளக்கம்:*

***ஶ்வேதாஶ்வதர உபநிஷதம் இதை விளக்கும்போது***
***க்ஷரம் ப்ரதா4னம் அம்ருதம் அக்ஷரம் ஹர:***
***க்ஷராத்மானாவீஶதே தே3வ ஏக: ।***
***தஸ்யாபி4த்4யானாத்3யோஜனாத்தத்த்வ-***
***பா4வாத் பூ4யஶ்சாந்தே விஶ்வமாயா நிவ்ருத்தி:***
***– (ஶ்வேதாஶ்வதரம், 1-10)***

*மூலப்பொருளாகிய சிவம் அழிவற்றது. ப்ரக்ருதியோ அழியும் தன்மை உடையது. சிவம் தனிப்பொருள். ஜகமும் ஜீவனும் அவனுள் ஒடுங்குகின்றன. அந்தச் சிவத்தை தியானிப்பதால் சிவயோகம் சித்தியாகி, ஜீவன் மாயப் பிரபஞ்சத்திலிருந்து விடுபடுகிறான்.*

***150. ஓசையின் உள்ளே உதிக்கின்றது ஒன்றுஉண்டு***
***வாசமலர் நாற்றம்போல் வந்து.***

*பொருள்: மலரிலிருந்து நறுமணம் வெளிப்படுதல் போல் பிரணவ ஒலியில் இருந்து பிரம்மாகிய சிவன் வெளிப்படும். இதே கருத்து மாண்டூக்ய உபநிஷத்திலும் கூறப்படுகிறது.*

*(விளக்கம் தொடரும்)*

## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவை புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# வேதாந்த விசாரம்

## *அத்தியாயம் 2*

## ஞானியின் பின்புலம்

### டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

*ஆரவாரமான சென்னை நகரிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ளது அந்த வேதாந்த குருவின் ஆஸ்ரமம். அவர், இந்திய மேற்கத்திய வேதாந்தங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பன்மொழி வித்தகர். சிஷ்யர்கள் மத்திய வயது கிரஹஸ்தர்கள்; ஆன்மீக நாட்டமுடையவர்கள்.*

*முதல் அத்தியாயத்தில் ஞானி யார்? என்ற விசாரம் நடைபெற்றது.*

*சிஷ்யர்கள்: ஆன்மீகவாதிகள் பலருக்கும் நல்ல பின்புலம் அமையுமா, இல்லை அவர்கள் தங்கள் பாதையைத் தாங்களாகவே அமைத்துக் கொள்கிறார்களா?*

*குரு: இரண்டு விதமாகவும் அமையக்கூடும். இதை உதாரணங்களோடு பார்ப்போம்.*

*ஞானிகளாகவும், தத்துவ மேதைகளாகவும் வாழ்ந்த சான்றோரின் வாழ்க்கையை நோக்கும்பொழுது, அவர்கள் பிறந்து, வளர்ந்த சூழல் அவர்களுடைய ஆன்மிகப் பயணத்தில் பெரும் பங்கு வகிப்பதை நோக்க முடிகிறது. இந்தச் சூழலை மனிதர்கள் வாழ்வில் மட்டுமன்றி, தெய்வீகக் கதாபாத்திரங்களின் பின்புலத்திலும் காணமுடிகிறது.*

*அதேபோல பலர் எந்தவித ஆன்மீகப் பின்னணியும் இல்லாமல் பெரிய ஞானிகளாகப் பிரகாசித்ததையும்*

பார்க்க இயலும். இதனால் ஞானி ஆவதற்கு ஒரு குறிப்பிட்ட குடும்பச் சூழலில் பிறக்க வேண்டும் என்ற வரையறைகள் எதுவும் இல்லை. இருப்பினும் இந்தப் பின்னணியை நோக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் நாம் இருக்கிறோம்.

## வேதகாலம்

அறிவுக்கும் ஞானத்திற்கும் பெரும் மதிப்பு இருந்த காலம் அது. புகழ் பெற்ற காயத்ரி மந்திரம் நம்முடைய மனோ பலத்தையும் அறிவையும் வளர்க்க ஓதப்படும் புனித மந்திரம். அதில் தீ: (dhi:) என்ற சொல் மேலான அறிவைக் குறிக்கிறது. ருக், யஜுர், சாமம் என்னும் மூன்று வேதங்களிலும் காணப்படும் இந்தச் சக்தி வாய்ந்த தாரக மந்திரம், உயர் ஞானத்திற்கு ஏற்றம் கொடுக்கிறது.

ஒருவன் சபையில் நன்கு வாதம் செய்தால் அவனுக்கு மட்டுமல்ல பெருமையும் புகழும்.

ஸர்வே நந்தந்தி யஸஸாகதேன ஸபாஸாஹேன ஸக்யா ஸகாய: (ருக் 10.71.10)

நண்பர்கள் வெற்றிக்கொடி கட்டிய அவனுடன் கூடி மகிழ்வார்களாம். ஏன்? அவனே, அவர்களின் காவலன்; அவர்களுக்கு வாழ்வாதாரமான உணவளிப்பவன்; வெற்றிச் செயல்களைச் செய்பவன்.

மற்றொரு புகழ் பெற்ற வேத மந்திரம் சபையின் கூட்டங்களில் ஒற்றுமையை வலியுறுத்துகிறது. 'ஒன்றாகக் கூடுவோம்; நம் சொல், மனம், அறிவு, லக்ஷியம் அனைத்தும் இணைந்து அமையட்டும். மகிழ்வோடு வாழ்வோம். (ருக் 10.191). இது பல மேடைகளில் பிரார்த்தனை மந்திரமாக இன்றும் ஒலிக்கிறது.

ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் கூட அறிவில் சிறந்தவர்கள். புதிதாகத் திருமணமான பெண்ணிற்கு வழங்கும் ஒரு ஆசிர்வாதம் சுவையானது.

*பூஷன் என்னும் தேவதை உன்னை அழைத்து வர, அஸ்வினி தேவதைகள் உன்னை வண்டியில் ஏற்றிச் செல்லட்டும். இந்த (புகுந்த) வீட்டின் தலைவியாக இரு; சபை விவாதங்களிலும் நீ பாகம் ஏற்றுப் பேசு. (அதர்வண 14.1.20)*

சபைகளில் விவாதம் செய்தல் அக்கால வழக்கில் பெரிய மதிப்பிற்குரிய செயல். அதில் பெண்களுக்கும் பெரும் பங்கு இருந்தது. இல்லத்தரசிகளாகவும் நாட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்துபவர்களாகவும் அவர்கள் இருந்தனர்.

மேற்கண்ட முறையில் வேத காலச் சூழல் அறிவுக்கும் ஞானத்திற்கும் ஒற்றுமைக்கும் பெண்ணுரிமைக்கும் ஏற்றதாக அமைந்திருந்தது.

அழகான போற்றத்தக்க சமுதாயம்!!

<u>உபநிஷதக் காலம்</u>

உபநிஷதங்களின் ஞானச் சூழல் புகழ் பெற்றது. குருகுலத்தில் எந்த வித புறபாதிப்புகளும் இன்றி சிஷ்யர்கள் ஞானத் தேடலில் ஈடுபடுகின்றனர். இந்த அமைப்பில் மிக இளம் வயதிலேயே மாணவர்களுக்கு கற்றலில் ஈடுபாடு வந்து விடுகிறது.

★ தைத்ரிய உபநிஷதத்தில் வரும் ப்ருகு என்னும் சிறுவனின் கதையைப் பற்றி நாம் அறிவோம். அவன் தந்தையும் குருவுமான வருணனிடம் போய் 'ஐயனே எனக்கு பிரம்மத்தை உபதேசம் செய்யுங்கள்' என வேண்டுகிறான்.

'ஆஹா என் பிள்ளை எத்தனை கெட்டிக்காரன்?' என்று உச்சிகுளிர்ந்து போய் அவர் உடனே உபதேசத்தை ஆரம்பிக்கவில்லை. 'நீ போய் தவம் செய்து பிரம்மத்தை அறிந்துகொள். தவமே பிரம்மம்' என்று இரண்டே வாக்கியங்களில் மகனைத் திருப்பி அனுப்பி விடுகிறார். 'ஸ்பூன் ஃபீடிங்க்' என்ற இந்தக் கால சுலப வழிகள் கிடையாது. 'உன் முயற்சியால் நீயே கற்றுக்

*கொள்' என்னும் அற்புதச் சூழல். அவனும் தவத்தால் பல படிகள் கடந்து உயர்ந்த பிரம்ம ஞானத்தை அடைகிறான். (ப்ருகுவல்லி: தைத்ரீயம்)*

- ★ *உண்மையையே பேசிய சத்யகாமனின் கதை அக்காலத்தில் சத்தியத்திற்கு அளிக்கப்பட்ட முக்கியத் துவத்தை விளக்குகிறது (சாந்தோக்கிய உபநிஷத்)*
- ★ *யாக்ஞவல்கியர், புகழ் பெற்ற ஞானி. அவரிடமே விவாதம் செய்கிறாள், அவருடைய மனைவியான மைத்ரேயி. (பிருஹதாரண்யகம்)*
- ★ *மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையை அறிய விரும்பிய பாலகனாகிய நசிகேதஸ், யமனிடமே சென்று 'அடம் பிடித்து' அந்த ஞானத்தைப் பெறுகிறான் (கடோபநிஷத்)*
- ★ *எல்லாக் கலைகளையும் அறிந்த நாரதர், அதனால் ஆத்ம ஞானம் கிடைக்கவில்லை என்று உணர்கிறார். அதன் பொருட்டு சனத்குமாரரிடம் ஆத்மஞானத்தைப் பற்றிய உபதேசம் பெருகிறார். (சாந்தோக்கிய உபநிஷத்)*
- ★ *சொல்லிக்கொண்டே போகலாம். உபநிஷத காலம் ஞானத்தேடலுக்கு ஒரு பொற்காலம். அறிவுதாகம் தணிய வாழ்நாளையே அற்பணித்த மஹனீயர்கள் வாழ்ந்த காலம்.*

***<u>சங்க காலம்</u>***

*ஒரு சுவையான காட்சி.*

*சேர, சோழ, பாண்டிய நாட்டு அறிஞர்கள் ஓரிடத்தில் கூடியிருக்கிறார்கள். அப்பொழுது கோழி என்னும் உறையூரைத் தலைநகரமாகக் கொண்ட சோழ நாட்டவன் 'நாங்கள் விடியற்காலையில் கோழி கூவியதும் எழுந்து விடுவோம்' என்று பெருமையோடு சொல்கிறான், சேர நாட்டவனும் 'எங்கள் நாட்டிலும் அப்படித்தான்' என்று அதை ஆமோதிக்கிறான்.*

*அப்பொழுது பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன், 'நாங்கள் பிரமனின் நாவிலிருந்து பிறந்த வேத ஒலியைக்*

*கேட்டு எழுவோம். சேர, சோழரைப் போல கோழி கூவலைக் கேட்டு அல்ல.' என்று வித்யாகர்வத்தோடு சொன்னானாம். இது பரிபாடல் என்னும் சங்கநூலில் வரும் செய்தி. இத்தகைய பாண்டிய நாட்டவர் கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குவது இயற்கையே. அங்குதான் தமிழ்ச் சங்கங்கள் தோன்றின என்பதும் குறிப்பித் தக்கது.*

*பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த*
*நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப*
*ஏம வின்துயி லெழுத லல்லதை*
*வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்*
*கோழியின் எழாதெம் பேரூர் துயிலே*

*– (பரிபாடல் திரட்டு.7)*

## இடைக்காலம்

*ராமன் பிறந்த குலத்தின் மன்னர்களைப் பற்றி காளிதாசன் இயற்றிய அற்புதக் காவியம் ரகுவம்சம் ஆகும். இவனுடைய காலம் சரியாக கணிக்கப்பட வில்லை. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவன் என்று கொள்ளலாம். இதன் முதல் காண்டத்தில் அந்த வம்சத்தின் பொதுக் குணங்களைப் பற்றிப் பேசுகிறான் கவி.*

*"அவர்கள் பலன் கிட்டும்வரை தங்கள் முயற்சியைக் கைவிட மாட்டார்கள். தங்களை நாடி வருபவர்களை கௌரவத்துடன் நடத்தி, அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வார்கள். பொருள் ஈட்டுவது தானம் செய்யவே. சத்தியம் காக்க குறைவாகப் பேசுபவர்கள் (ஸத்யாய மிதபாஷிணாம்); புகழுக்காக வெற்றி வேட்கை உடையவர்கள். ராஜ்யத்தின் தொடர்ச்சிக்காக (சந்ததிக்காக) விவாகம் செய்து கொள்வார்கள்.*

*அவர்கள் பால்யத்தில் நன்கு கற்று, யௌவனத்தில் சுகங்களை அநுபவித்து, முதுமையில் தவமிருந்து இறுதியில் யோகத்தினால் உடலை நீப்பவர்கள்."*

இந்த வம்சத்தில் வந்தவர்கள் ப்ளாட்டோ என்னும் கிரேக்க மன்னன் கண்ட '்ஃபிலாசபர்கிங்' (philosopher – king) என்னும் வேதாந்த மன்னர்களாகத் திகழ்ந்தது இயற்கையே! இந்த வம்சத்தில் வந்த திலீபன் என்னும் மன்னன். தன் பாதுகாப்பில் இருந்த ஒரு பசுவைக் காக்கத் தன் உயிரையே அளிக்கிறான். அவன் மகன்தான் புகழ் பெற்ற ரகு என்னும் மன்னன். அவன் பெயரை ஒட்டியே அந்த வம்சத்து மன்னர்கள் ராகவன் என்னும் பெயரைப் பெருகிறார்கள். 'விஸ்வஜித்' என்னும் வேள்வியில் தன் சொத்தையெல்லாம் தானமாக அளித்து மண்பண்டங்கள் மட்டுமே எஞ்சிய நிலையில், அவனிடம் குருதக்ஷிணை அளிக்க உதவி கேட்டு வருகிறான் ஒரு பிரம்மச்சாரி வாலிபன். மன்னனிடம் தம்பிடிக் காசு கிடையாது. ஆனால் ரகுவா அஞ்சுவான்? மறுநாள் குபேரனிடம் யுத்தம் செய்து பணம் திரட்ட ரதத்தை ஆயத்தம் செய்கிறான் அந்த பராக்கிரமசாலி.

யுத்தம் நடந்ததா? யார் வென்றார்கள்?

இல்லை. யுத்தம் நடக்கவில்லை. ரகுவிடம் போர் செய்ய விரும்பாத குபேரன், அன்றிரவே கஜானாவைப் பொன்னால் நிரப்பி விடுகிறான். இத்தகைய தியாகமும், ஞானமும் தவமும் வீரமும் பொருந்திய வம்சத்தில் பிறக்க விரும்பி, நாராயணன் ராமனாக அவதரிக்கிறான்.

(கடைசியில் இந்த வம்சத்திலும் ஒரு கோடாரிக் காம்பு பிறக்கிறது. அதைப் பின்னர் காண்போம்).

<u>சமீபகாலம்</u>

சுத்தானந்த பாரதியார் சமீப காலத்தவர். பாரதியாரிடம் பெரும் ஈடுபாடு கொண்டவர். அரவிந்தர், ரமண பகவான் போன்றோரிடம் நெருங்கிப் பழகியவர். இவர் இயற்றிய 'எப்படிப் பாடினேன்' என்ற பாடலில் தான் வாழ்ந்த சூழலை அவருக்கே உரிய நடையில் கூறுவார்.

*வீட்டில் இனிய பாட்டின் முழக்கம்*
*இப்புறம் வேதம்; அப்புறம் கீதம் எதிரே*
*கோவிலில் இசையின் அலைகள்*
*சிவகங்கை யெங்கும் திருவிழாக் கோலம்*
*பாடகர், பண்டிதர், பாவலர், நாவலர்*
*பாகவதர்கள், பஜனை மடங்கள்*
*மல்கிய சூழலில் வளர்ந்ததென் வாக்கே.*
*கேட்டுக் கேட்டுப் பாட்டுக் கற்றுப்*
*பாமாலை சூட்டிப் பரமனைத் தொழுதேன்.*

அவர் வாழ்ந்த சூழலை சற்று நோக்குங்கள். வீட்டைச்சுற்றி இலக்கியமும் வேத கோஷமும் சங்கீதமும் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆலயங்களில் மந்திர கோஷம், சுற்றிலும் பஜனை கோஷ்டிகள். உடன் இருப்பவர்களோ, சிறந்த அறிஞர்கள் பாடகர்கள் நாவலர்கள், பாகவதர்கள். இத்தகைய சூழலில் இதை கேட்டு கேட்டு ஞானத்தை உள்வாங்கி எழுதிய பாடல்களே சுத்தானந்த பாரதியின் சிறப்பிற்கு காரணம். இதுவெல்லாம் எதுகை மோனை பார்த்து எழுதப்பட்ட இலக்கியம் அல்ல. சுத்தமான ஒரு சித்தத்தின் அடிநாதம். பூரண ஞானத்தில் எழுந்த மந்திர ஓசை.

## வேறுபட்ட சூழல்

இதன் மறுபக்கமே, நந்தனாரும் கண்ணப்பரும் தோன்றிய பின்புலம். இறைச்சி வாடையன்றி இறை வாடையே வீசாத சூழல்; பக்திக்கும் ஞானத்துக்கும் ஒவ்வாத களம்; ஆனால் அங்குக் கிளர்ந்து எழுகிறது அன்பு என்னும் சிவஞ்ஞானம்.

சேரி என அழைக்கப்படும் பகுதியில் பிறந்து ஆன்மீகத்துக்கு முற்றிலும் மாறுபட்ட சூழலில் வாழ்ந்தவர் நந்தனார். நமக்கெல்லாம் மிகவும் பரிச்சயமான அன்பர். அவர் வரலாற்றை அழகிய பாடல்களாக வடித்துக் கொடுத்தவர் கோபாலகிருஷ்ண பாரதி. அவருடைய ‘மெத்தக்கடினம் உமக்கடிமை’

*என்னும் பாடல் பிரசித்தி பெற்றது. அதில் வரும் கீழ்க்கண்ட வரிகளில் தத்துவம் மிளிர்கிறது.*

***கண்டாரும் கிடையாது விண்டாருஞ் சொன்னதில்லை***
***அண்டாண்ட கோடியெல்லா மொன்றாய்ச் சமைந்திருக்கும்***
***அல்லவோ .... ..... ..... அங்கே***
***செல்லவோ நேரமாகுதல்லவோ***

*எதுகையும் மோனையும் போட்டி போடும் மிடுக்கான தமிழ் வரிகள். அழகோ அழகு.*

*ராம பக்தியில் திளைத்து எழுந்தவன் குகன். பிறப்பில் வேடுவன். அவனைப் பார்த்தால் ஆசார சீலன், அமைதியே வடிவானவன் என்றெல்லாம் சொல்லமுடியாது; அவன் எப்படி இருப்பான் தெரியுமா?*

- ★ *வாயிலிருந்து இறைச்சி மணம்;*
- ★ *சிரிப்பே காணா முகம்;*
- ★ *காரணமின்றியே கொடூரமான காட்சியளிக்கும் தோற்றம்.*
- ★ *யமனையே அச்சுருத்தும் கொடூரமான குரல்.*

*சொன்னவன் கம்பன். அவன் வருணனையைப் பாருங்கள்*

***ஊற்றமே மிக ஊனொடு மீன் நுகர்***
***நாற்றம் மேய நகை இல் முகத்தினான்,***
***சீற்றம் இன்றியும் தீ எழ நோக்குவான்,***
***கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினான்.***

***– (அயோத்தியா காண்டம், குகப் படலம் 8)***

*அப்பப்பா இப்படியொரு பக்தனா? ஆயினும் அவனை லக்ஷ்மணன் அறிமுகப்படுத்தும் பாங்கினைப் பாருங்களேன்*

***'உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்.'***

***– (குகப் படலம் 12)***

*தாயைவிட நல்லான் என்னும் சொல்லில் அவன் அன்பொழுகும் மனதைக் காண்கிறோம். மற்றொரு இடத்தில்,*

***உங்கள் குலத்தனிநாதற்கு உயிர்த் துணைவன்***
***உயிர்த் தோளான்***
***– (அயோத்தியாகாண்டம். கங்கை காண் படலம் 25)***

*மிக உயர்ந்தவனாகிறான் குகன்.*

*சாத்விகமான நியம நிஷ்டைகளோடு கூடிய பக்தர் பலர் ராமனுக்கு உண்டு. ஆனால் அவர்கள் யாருக்கும் கிடைக்காத புகழாரம் குகனுக்குக் கிடைக்கிறது. 'குகனோடு ஐவரானோம்' என்று ராமனே போற்றும் பேறு அவனுக்கு மட்டுமே கிடைக்கிறது.*

*சிஷ்யர்கள்: அழகிய விளக்கம். இதற்கு மாறாக நல்ல சூழலில் பிறந்து தீய ஒழுக்கத்தில் ஈடுபட்டவர்களும் உண்டல்லவா?*

*குரு: அவ்வாறும் சிலர் இருந்தனர்.*

*பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரே குலத்தில் உதித்தவர்கள்; ஒரே குருவிடம் பயின்றவர்கள். ஆனால் அவர்கள் மனப்போக்கு மாறுபட்டதாக இருக்க வில்லையா? பக்திக்கு எதிர்ப்பதமாக தன் மகனை வளர்க்க முயன்றான் ஹிரண்யகசிபு. ஆனால் அந்த சூழலுக்கு முற்றிலும் மாறாக நாராயணனையே தெய்வமாக வழிபட்டான் பிரஹலாதன்.*

*ஏன் ராமன் பிறந்த இக்ஷ்வாகு குலத்தை எடுத்துக் கொள்ளலாம். அங்கு ராமனுக்கு முன்னும் பின்னும் பல தலை சிறந்த மன்னர்கள் தவநெறியும் அரசு நெறியும் பிறழாமல் வாழ்ந்தனர். அவர்களின் பொதுக் குணங்களை முன்னர் பார்த்தோம். ஆனால் அந்த வம்சத்தில் வந்த அக்னிவர்ணன் காமத்திற்கும் குடிபோதைக்கும் வசப்படுகிறான். அவன் அந்தப்புரத்திலேயே காலத்தைக் கழித்து மாண்டு போகிறான்.*

*ஞான மார்க்கத்தில் வெற்றிபெற சூழல் ஒரு காரண மாகலாம். ஆனால் அதுவே நிர்ணயிக்கும் சக்தியல்ல.*

# தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது...

*ஸ்ரீ ரமண மகரிஷிகள் திருவாதிரை நாளன்று நள்ளிரவில் மார்கழி மாத புனர்வசு நக்ஷத்திரத்தில் திருச்சுழியில் அவதரித்தார். அவரைச் சார்ந்து ரமணானுபூதி அடைந்த பசு, மான் போன்ற ஜீவராசிகளும் மற்றும் பல அணுக்கத் தொண்டர்களும் ஆவர். அவர்கள் அவ்வாறு பெற்ற பேரின்பத்தை வருங்காலத்திற்கு காலத்தால் அழியாத கவிதையாக வடித்துக் கொடுத்தவர் ஸ்ரீ முருகனார் அவர்கள் ஆவார். அவர் பகவானின் மார்கழி மாத புனர்வசு நன்னாள் எவ்வாறெல்லாம் சிறப்பு பெறுகிறது என்பதை உணர்வுபூர்வமாக தனது ஸ்ரீரமண சந்நிதிமுறையில் யாத்ததே 'புனர்வசு வண்ணம்' என்னும் பாக்கள்.*

*உலகில் தேர்ச்சி பெறத்தக்க கலைகள் எவ்வெத்தனை உளவோ அவ்வத்தனையும் கற்றுத் தேர்ந்தாலும் சிந்தை தெளியாது என்பதை* ***தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது... என்றும்*** *ரமண பகவானைச் சார்வதே கதி வழி காண்பிக்கும் என்று அனுபவரீதியாகக் கூறுகிறார். பகவானை மட்டுமல்லாது அவரது பக்தர்களையும் இப்பாடல் வரிகளில் சிறப்பிக்கிறார். அணில், ராமருக்கு ஆற்றிய சிறு தொண்டினைப் போன்று* ***எதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெறுமோ என்று அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்...*** *என்பதாக ரமண அன்பர்கள் புனர்வசு நன்னாளன்று ஏதாவது ஒரு சிறிய அளவிளேனும் தொண்டாற்ற இயலுமா என்று ஏங்கித் தவிக்கும் நிலைப்பாட்டை சிறப்பிக்கிறார்.*

*மிகச் சிறந்த பாக்களாகிய இப்புனர்வசு வண்ணத்தை ஒவ்வொரு புனர்வசு நன்னாளிலும் பக்தர்கள் பாடிப் பரவுவது மிக நல்லது.*

*ரமணானுபூதி பெற்று பாடப்பெற்ற இவ்வரிகளின் உட்பொருள் மொழிக்கு எட்டாதது. உணரப்பட வேண்டிய உள்ளர்த்தங்கள் அனைத்தும் உணர்த்தப்படுவது என்பது இயலாதெனினும் ஓரளவாவது இதன் பொருள் அறியப்பட வேண்டி இப்புனர்வசு வண்ணம் இங்கு அளிக்கப்படுகிறது.*

# புனர்வசு வண்ணம்

*(ஸ்ரீ பகவானின் ஜென்ம நக்ஷத்திர தினத்தின் வைபவங்களைக் கூறல்)*

*(கலிநிலைத் துறை)*
*பண் : குறிஞ்சி (சுருட்டி)*

முத்து விதானம் என்னும் தேவாரப் பண்

***கண்ணால் உனது கதிர்முக(ம்) நாங்கள் காணப்பெற்று***
***அண்ணால் கண்ணால்ஆம் பயன் ஆர்ந்தனம் என்பாரால்***
***எண்ணா நின்றூர் இதயத்து ஒளிரும் ரமணப்பேர்***
***அண்ணா மலையான் புனர்வசு நன்னாள் அது வண்ணம்.*** 1

*"உம்முடைய ஒளிவீசும் கதிர்முக தரிசனம் காணப் பெற்றதால், கண்பெற்ற பயனை நாங்கள் அடைந்தோம்" என்று பகவானது தரிசன பாக்கியம் பெற்றவர்கள் மகிழ்ந்து கொண்டாடுவர். அத்தகைய அடியர்களது இதயத்தில் ஒளிரும் அண்ணாமலையானாகிய ரமண பகவானின் ஜயந்தித் திருநாளாகிய புனர்வசு நன்னாளின் சிறப்பு சொல்லும் தரமன்று.*

***இதாஒரு கோடியினர் போல் ஒளிரும் ரமணப்பேர்***
***உதார குணாளன் உவப்பது நோக்கி உவப்பாரால்***
***சுதா வடிவான சொரூபானந்த சுயம்ஜோதி***
***அதாவெமை ஆண்டான் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.*** 2

*கோடி சூரியப் பிரகாசத்தோடு சிறப்புறும் பகவான், தன்னிலே தான் ரமிப்பாராக இருப்பது கண்டு, அடியார்கள் தாமும் மகிழ்வுறுவர். ஆத்ம சொரூபானந்த சுயம் ஜோதியே மாபெரும் அம்ருதக் கடலாகப் பிரகாசிக்கும் பகவான், ஆத்ம வஸ்துவாகுமாறு எனக்கும் அருள்பாலித்து ஆட் கொண்டார். அத்தகைய பகவான் அவதரித்த சிறப்பு வாய்ந்தது புனர்வசுத் திருநாள் ஆகும்.*

***குலவும் தொண்டர் கூடித் தம்மிற் கொண்டாடும்***
***தலைவன் பேச்சே தம் உணவாகத் தழைப்பாரால்***

*இலகும் புகழால் எண் திசை போர்த்த ரமணன்பேச்சு*
*அலகில் களிப்பாம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.* 3

தம் சத்குருவாம் பகவானது பெருமைகளைப் பேசி, பாடி மகிழ்வதையே தம் உணவாகக் கொண்டு அடியர் உவப்பர். எட்டு திசைகளையும் தம் புகழால் நிறைவித்துவிடும் பகவானது பெருமைகள் அடியர்க்கு அளவில்லா ஆனந்தமேயாகும். ஆனந்தத்திற்குக் காரணமான பகவானது ஜயந்தித் திருநாள் புனர்வசு நன்னாள் ஆகும்.

*பொருளின் வண்ணம் புகழின் வண்ணம் பொலிவண்ணம்*
*தெருளின் வண்ணம் திருவின் வண்ணம் திகழ்வண்ணம்*
*இருளின் வண்ணம் இலையாம் வண்ணம் ரமணன்கூர்*
*அருளின் வண்ணம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.* 4

பொருள், புகழ் ஆகியவை ஒளிர்ந்து பொலியும்! ஆத்மஞான அறிவின் தெளிவும், தெய்வீகமும் திகழும்! அஞ்ஞான இருள் சிறிதுமின்றி மறையும்! இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த நன்னாள் ஸ்ரீபகவானின் ஜயந்தித் திருநாளாகிய புனர்வசு நன்னாள் ஆகும்.

*மீட்சியின் வண்ணம் விஞ்சையின் வண்ணம் வீட்டின்பக்*
*காட்சியின் வண்ணம் கேள்வியின் வண்ணம் கடவுள்மாப்*
*பூட்சியின் வண்ணம் பூரண வண்ணம் பொற்றாளுக்கு*
*ஆட்சியின் வண்ணம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.* 5

அகந்தைக் கட்டிலிருந்து விடுதலை, ஆத்ம வித்தை, ஆத்ம வீட்டின்பக் காட்சி, ஆத்ம அறிவு, கல்வி, இறைவனொடு ஒன்று கலக்கும் பூரண அழகு, இறைவனுடைய பொற்றாள்களுக்குப் பூரண சரணாகதி ஆகியவை முழுமையாகச் செறிந்து விளங்கும் நன்னாள் புனர்வசுத் திருநாள் ஆகும்.

*தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது*
*நீர்கன ஞான நிலைபெற வேட்ட நெஞ்சத்தீர்*
*சார்கதி காட்டும் சதாசிவ மூர்த்தி ஜயந்திச்சீர்*
*மார்கழி மாதப் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.* 6

*ஆயகலைகள் அறுபத்து நான்கையும் கற்றுத் தேர்ந்தாலும், சிந்தை தெளியாத காரணத்தால், இறுதியில் ஆத்மக்கலையைக் கற்று, ஆத்ம ஞான நிலையைப் பெற விரும்பும் மெய்யடியவர்களே! நீங்கள் விரும்பும் இறுதி சிவசாயுஜ்ய முக்தி நிலையைக் காட்டிக் கொடுக்கும் திருநாள் சிவபெருமானேயாகிய பகவான் ரமணரது ஜயந்தித் திருநாளாம் புனர்வசு நன்னாளேயாகும்.*

***ஆதர(ம்) மிக்க அடியர் அகக்கார் அகன்றோட***
***மூதுரையாலே முகவுரை ஓதி மோனம் சேர்***
***போதனையால் அநுபூதி புணர்க்கும் புலவோன் ஞான***
***ஆதவ மெய்யன் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.*** *7*

*பக்தியும் முமுக்ஷுத்வமும் கொண்ட அடியார்களின் அகஇருள் அகலும் பொருட்டு அனுக்கிரகிப்பவர். அதற்காக வேத வேதாந்தங்களை தனது மௌன உபதேசத்திற்கு, முகவுரையாகப் பயன்படுத்தும் பெரும்புலவர் ரமண பகவான். மேலும் மோனமாகிய போதனையால் ஆத்மானுபூதியை அடியார்களது இதயத்தில் விளைவிக்கும் ஞானசூரிய, சத்திய சொரூபன். அத்தகைய பகவானது ஜயந்தித் திருநாள் சிறப்பு மிக்க புனர்வசு நன்னாள் ஆகும்.*

***விதானம் கட்டித் தொங்கல் விட்டு விநோதம்சேர்***
***பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்***
***எதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெருமோஎன்று***
***அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.*** *8*

*பல அடியார்கள் ரமண பகவானது ஜயந்தி நாளன்று அவரது சந்நிதானத்தை பல விதங்களில் அலங்காரம் செய்வர். மற்றும்பல அடியார்கள் பகவானது புனர்வசு நன்னாளில் ஏதாகினும் ஓர் குற்றேவலாவது கிடைக்கும் பாக்கியம் பெறமாட்டோமா என ஏக்க நினைவுடன் காத்திருப்பர். இத்தகைய பெருமை வாய்ந்தது ரமணரது புனர்வசு நன்னாள்.*

***மாதவர் வேதியர் மந்திரம் ஓதி வழுத்துவார்***
***கோதையர் தாம்தம் கொழுந ரொடும் பின்குறுகுவார்***

*பேதைய ரானோர் மேதைய ராகப் பிறங்குவார்*
*ஆதர(ம்) நாம் செய் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.* 9

மாபெரும் தவசிகள், வேதமோதும் அந்தணர் ஆகியோர் மந்திரங்கள் ஓதிப் போற்றுவர். பெண்மணிகள் தத்தம் கணவர்மார்களொடும் பங்கேற்பர். ஏதுமறியா பேதையர்களும் அறிவார்ந்த மேதைகளாகப் பிரகாசிப்பர். இத்தகைய சிறப்புமிக்க நன்னாள் நாங்கள் அன்புடன் கொண்டாடும் புனர்வசு தினம் ஆகும்.

*தாழிசை வண்ணம் சந்த விருத்தம் சாற்றுவார்*
*ஏழிசை வாணர் யாழொடு வீணையில் ஏற்றுவார்*
*தோழந் தோகையர் பூப்பலி பொற்சுணம் தூவுவார்*
*வாழி ரமணன் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.* 10

பன்மொழிப் புலவர்கள் பற்பல சந்த விருத்தங்களில் ஸ்ரீரமண தோத்திரப் பாமலைகளை புனர்வசு நன்னாளில் பகவானுக்கு அணிவிப்பர். யாழ், வீணை முதலான ஏழ்வகைக் இசைக்கருவி வல்லுனர்கள் பகவான் புகழ் இசைப்பர். பற்பல வண்ண மலர்களாலும், பூமியைப் பல வண்ணக் கோலங்களாலும் அலங்கரிப்பர். இத்தகு சிறப்பு வாய்ந்த ரமணரும் அவரது ஜன்ம நக்ஷத்திரமான புனர்வசுவும் வாழ்க.

## வாழ்த்து

*மோகம் ஒழிக்கும் முனிவன் திருவாய் மொழிவாழி*
*சோகம் அகற்றும் சுத்தாத் துவிதச் சுடர்வாழி*
*ஏக சொரூப ரமணன் கருணை இயல் வாழி*
*காகம் உறவு கலந்தால் போலும் கணம்வாழி.* 11

மோக அகந்தையை அழிக்கும் பகவானது உபதேசங்கள் வாழ்க! அகந்தைத் துயரைக் களையும் சுத்த அத்துவிதச் சுடராம் பகவான் வாழ்க! ஏகாத்ம சொரூபராம் ரமண பிரானின் கருணை இயல்பு வாழ்க! காக்கைகள் கூட்டம் போன்று மனதால் ஒன்றுபட்டு வாழும் அடியார் திருக்கூட்டம் வாழ்க!

# பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள்
# 142–ஆவது ஜயந்தி விழா
# செய்தித் தொகுப்பு

*அனைவரும் முக்தி அடையும் பொருட்டு அம்பிகை, ஈசனிடம் வழிகாட்டுமாறு வேண்டுகிறாள். சிவபெருமான் அனைவரும் முக்தி அடைய வழிமுறைகளை கூறுவதாக அமைவதே ‘தேவிகாலோத்ர ஞானவிசார படலம்’ எனும் நூல். அதை ரமணர் தமிழில் மொழிபெயர்த்து அருளியுள்ளார். அதில் கூறப்படும் வழிமுறைகள் அனைத்தும் ஞானநாட்ட முள்ளோர்க்கு மிகவும் பயனுள்ளது.*

*அந்த நூலில் கூறப்பட்ட வழிமுறைகள் எதுவுமே அனுசரிக்க முடியவில்லை என்றாலும், இறுதியாக உறுதியாக கடைப்பிடிக்கச் சொல்வது, வேண்டுதல் வேண்டாமை அற்ற ஞானியரின் பாதங்களைப் பற்றி பூஜிப்பதையே.*

*திருவள்ளுவரும் இதையே ‘பற்றுக பற்றற்றான் தாளினை’ எனவும், ‘வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இலை’ என்பதாகவும், வீடுபேறு அடைய வழியாக இதனையே வகுத்துக் கூறுகிறார். அத்தகைய வேண்டுதல் வேண்டாமை அற்ற உயர் மஹரிஷி ரமணர் நம்காலத்தே நம்மிடை தோன்றி நாம் உய்ய உளம்கொண்டு வாழ்ந்து காட்டியுள்ளார்.*


*அவரைக் கொண்டாடுவது ஒன்றே போதும் நாம் உய்ய. யாரெல்லாம் பிறந்தநாள் கொண்டாடுவதில் அர்த்தம் உண்டு என்று பகவான் ரமணர் கூறுவதுண்டு. அதாவது யாருக்கு மீண்டும் பிறவி இல்லையோ அவர் பிறந்தநாளே கொண்டாடத்தக்க பிறந்தநாள். அத்தகைய மாபெரும் ஞானியை குருவாகப் பெற்ற நாம் அவர் பிறந்தநாளைக் கொண்டாடவேண்டிய அவசியத்தை உணர்கிறோம்.*

*பகவானின் அடியார்க்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர் முகவைக்கண்ண முருகனார் அவர்கள். அவர்கள் இந்த ரமண ஜயந்தி விழாவை, மார்கழி மாத புனர்வசு நன்னாளை பக்தர்கள் எவ்வாறெல்லாம் மகிழ்ந்து கொண்டாடுவர் என்பதை 'புனர்வசு வண்ணம்' எனும் பாமாலை வாயிலாக ரமண உலகத்தார்க்கு அருளி உள்ளார். அதன் பதிவை இந்த இதழிலேயே பொருளுடன் பதித்துள்ளோம்.*

*'கொரானா' எனும் பேரிடர் தாக்கத்துக்கு உள்ளாகாத நாடே இல்லை எனலாம். அதன் தாக்கத்தினால் சத்சங்கத் தடைகள் ஏராளம். ரமண அன்பர்கள் இந்தியாவிலும் உலகெங்கும் அருணை ஸ்ரீ ரமணாச்ரமம் வந்தடைய முடியாமலும், ஆங்காங்கு சத்சங்கம் கூடமுடியாமலும் பரிதவிக்கும் துயர், சொல்லி மாளாது. உலகெங்கும் உள்ள ரமண பக்தர்கள் இன்றும் தொலைத் தொடர்பிலேயே சத்சங்கம் கண்டு, ரமண ஜயந்தி விழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றனர். எனினும் பகவானின் இந்த 142–ஆவது ஜயந்தி விழாவினை, இந்தியாவில் ஓரளவேனும் பக்தர்கள் கூடிக் கொண்டாடும் பாக்கியம் பெற்றோம் எனலாம். எங்கும் விழா முடிவில் அன்பர்கள் சிலாகித்து மகிழ்ந்த ஒரே சொல் 'அமைதி பெற்றோம்' என்பதே. ஒவ்வொருவரின் முகத்திலும் கண்களிலும் ஒளிர்ந்த அந்த சந்துஷ்டியை விவரிக்க இயலவில்லை. இறை ரமணா, உன் பெரும் கருணையை என்ன என்பது! உலகளாவிய ரமண அயல்நாட்டு அன்பரகள் அனைவருக்கும் ரமண வடிகாலாகத் தொண்டாற்றி வரும் நியூயார்க் அருணாசல ஆஸ்ரம மையத்தைப் பாராட்டாது இருக்க முடியாது. இந்த ஜயந்தித் திருநாளை உலகம் தழுவி தொலைத் தொடர்பாக* YouTube *வழியாக அனைத்துலக மையங்களையும் ஒருங்கிணைத்த பெரும் தொண்டை என்னென்பது! வாழ்க அவர்தம் தொண்டு!*

*முடிந்தவரை நமக்குத் தகவல் அளித்த அல்லது நம்மால் பெறப்பட்ட சத்சங்க ரமண ஜயந்தி விழாக்களைத் தொகுத்து அளித்துள்ளோம். இங்கு பதிவில் இடம் பெறா மையங்கள் அநேகம். அவர்களின் பாதம் பணிகின்றோம்.*

* * *



**ஸ்ரீ ரமணாச்ரமம் திருவண்ணாமலை**

*பகவான் ரமண மகரிஷிகளின் 142 ஆவது ஜயந்தி விழா 21-12-2021 அன்று சிறப்பான முறையில் நடைபெற்றது.*

*மஹன்யாச ருத்ர ஜபம், மார்கழி மாத பாராயணம், ஜயந்தி தின சிறப்புப் பாராயணம், ருத்ராபிஷேகம், சிறப்பு அபிஷேகங்கள், பூ மாலை அலங்காரங்களுடன் அன்பர்கள் பாமாலையும் சேர்ந்து, ரமண ஜயந்தி விழாவிற்கு அழகு சேர்த்தன. இறுதியில் பகவானுக்கு ஆரத்தியுடன் விழா சிறப்புற நிறைவுற்றது. சாதுக்கள், அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் சிறப்பு உணவுப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

*ரமண ஜயந்தி நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணி முதல் ஆச்ரம YouTube சேனலில் நேரலை செய்யப்பட்டது. திருச்சுழியில் பகவான் பிறந்த இல்லமான சுந்தர மந்திரத்திலும் சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம் நடைபெற்றது.*

**ரமண கேந்திரா, அலமேலு மங்காபுரம், மயிலை–சென்னை**

*பகவான் ஸ்ரீ ரமணரின் 142–ஆவது ஜயந்தி விழா, திரு. அனந்தசாமி அவர்கள் நினைவு ஞான ஹாலில் மிகச் சிறப்பாக*

*21-12-2021 அன்று கொண்டாடப்பட்டது. சிறப்பு நிகழ்வாக பல நாட்கள் முன்பாகவே ஸ்ரீ ரமண லட்சார்ச்சனை தொடங்கி நடைபெற்றது.*

*ரமண ஜயந்தி நாளன்று மஹன்யாச ஏகாதச ருத்ர பாராயணம், சிறப்புப் பூஜை, அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது. திரளாகக் கலந்துகொண்ட பக்தகோடியர்க்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. ரமண கேந்திரா நிர்வாகிகள் பங்கேற்றனர்.*

### ஸ்ரீ ரமண மந்திரம், மதுரை

*16-12-2021 முதல் 21-12-2021 வரை பகவானின் ஜயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபத்தில் நாள்தோறும் மாலை சிறப்புச் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*ஜயந்தி தினத்தன்று ரமண மந்திரத்தில் வேதபாராயணம், ஸ்ரீரமண ஸஹஸ்ரநாம அர்ச்சனை மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. அனைவர்க்கும் அன்னம் பாலிப்பு நடந்தது.*

### ஸ்ரீ ரமணாலயம், குரோம்பேட்டை சென்னை

*21-12-2021 ஸ்ரீ ரமண ஜயந்தி அன்று அதிகாலை 07.00 மணிமுதல் வேதபாராயணம், ஸ்ரீ ரமண அஷ்டோத்ர பூஜை நடைபெற்றது. 09.30 மணிக்கு மயிலை 'திருவாசக செம்மல்' திரு. சத்குருநாத ஓதுவார் அவர்கள் பக்க வாத்யங்களுடன் 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' சிறப்புப் பாடல்களை பண்ணிசையுடன் பாடினார். அக்ஷரமணமாலை பாராயணத்திற்குப் பின்னர் அனைவர்க்கும் தலைவாழை இலையில் ரமண விருந்து அளிக்கப்பட்டது.*

### ஸ்ரீ முருகனார் மந்திரம், ராமநாதபுரம்

*21-12-2021 அன்று ஸ்ரீ ரமணரின் 142—ஆவது ஜயந்தி விழா காலை 09.00 முதல் மதியம் வரை கொண்டாடப்பட்டது. டாக்டர். சந்திரசேகர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். திரளாக கலந்துகொண்ட அன்பர்கள் அக்ஷர மணமாலை பாராயணம் செய்ய சிறப்பு வழிபாடும் நடைபெற்றது. அனைவர்க்கும் அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

### ஸ்ரீ ரமணர் திருக்கோயில், மாத்தூர் – மதுரை

*பகவான் ராமணருக்கான அழகு திருக்கோயில் ரமண அன்பர் நௌஷத்—ரமணா தம்பதியினரால் எழுப்பப்பட்டு, சத்சங்கம் நடைபெற்று வருகிறது.*

*திரு நௌஷத் அவர்கள் இஸ்லாமியராயினும் ரமணர்பால் ஈர்க்கப்பட்டு ரமணவழியில் வாழ்பவர். 142—ஆவது ரமண ஜயந்தி விழா இங்கு வேதபாராயணத்துடன் பகவானுக்கு அபிஷேக ஆராதனை செய்து கொண்டாடப்பட்டது. முடிவில் அனைவர்க்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

### ஸ்ரீ ரமண சத்சங்கம், நங்கைநல்லூர் – சென்னை

*21-12-2021 அன்று 142—ஆவது ரமண ஜயந்தி, மாடர்ன் உயர்நிலைப் பள்ளி எதிரில், பொங்கி மடாலயத் தெருவில் உள்ள விலாசத்தில் மாலை 04.30 மணிக்குத் துவங்கி இரவு 07.30 வரை கொண்டாடப்பட்டது. வேதபாராயணம் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது. திரு. அன்னை அடிகள் தியானம் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். ஆரத்திக்கு பின்னர் மகா பிரசாதம் அனைவர்க்கும் வழங்கப்பட்டது.*

### ரமணஸமாஜம், சூளைமேடு – சென்னை

*142 ஆவது ரமண ஜயந்தி விழா ஸ்ரீ இஷ்ட ஸித்தி வேதபாராயண டிரஸ்ட், ரமண ஸமாஜத்தில் நடைபெற்றது. 18 & 20-12-2021 இரண்டு நாட்களும் சிறப்பு வேத பாராயணம் நடைபெற்றது. 21-12-2021 ரமண ஜயந்தி அன்று மஹான்யாச ஏகாதச ருத்ர பாராயணம், சிறப்புப் பூஜை, ஸ்ரீ ரமண ஸஹஸ்ரநாம சமஷ்டி பாராயண அர்ச்சனைகள் நடைபெற்றன. அனைவர்க்கும் அன்னதானம் நடைபெற்றது.*

### இலங்கை

*இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் தேற்றாத்தீவுக் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீரமண மகரிஷி ஆசிரமத்தில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் 142—ஆவது ஜயந்தி விழாவின்போது பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான 16 மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கப்பட்டது.*

*இதற்கான நிதி ஆசிரமத்தின் சமூகசேவைப் பணிகளுக்கு ஆதரவு வழங்கி வந்த பகவானின் பக்தர் அமரர் கிறிஸ்டோபர் லாரன்ஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக ஆஸ்திரேலியாவில் வசிக்கும் திரு. சக்திலோகன் லோகிதராஜா அவர்களால் வழங்கப்பட்டது.*

**ஸ்ரீ ரமண சத்சங்கம், கோவை**

*142 ஸ்ரீ ரமண ஜயந்தி விழா – திரு மணிகண்டன் (மணி) அவர்கள் இல்லத்தில் பாராயணம் மற்றும் அன்னம் பாலிப்பு. பகவான் கிருபையால் நல்ல முறையில் நடந்தது.*

**பொன்னிறை**

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 142 ஆவது ஜயந்தி விழாவானது திருவாரூர் - திருத்துறைப்பூண்டிக்கு ரயில் மார்க்கத்திற்கு அருகில் அமைந்திருக்கும் அழகிய கிராமமான பொன்னிரையில் மிக எளிமையான முறையில் நடைபெற்றது. கோபூஜை, அபிஷேகத்திற்குப் பிறகு மலர்களால் அலங்கரிக்கப் பட்ட பகவானின் புகைப்படத்திற்குமுன் கிராம மக்கள் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். பகவான் படத்திற்கு மங்கள ஆரத்தி காண்பிக்கப்பட்டது. விழாவிற்கு தஞ்சாவூர், திருவாரூர், சிதம்பரம், திருத்துறைப் பூண்டி போன்ற ஊர்களிலிருந்து பக்தர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

**ஸ்ரீ ரமணாலயம், பூண்டி – தஞ்சை**

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 142–ஆவது ஜயந்தி விழாவானது தஞ்சாவூர் மாவட்டம் பூண்டி கிராமத்தில் காவிரியின் கிளை நதியான வடவாற்றங்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ ரமணாலயத்தில் கடந்த 26-12-2021 ஞாயிறன்று காலை 10.00-12.30 வரை மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.*

*அன்பர்களின் அக்ஷரமணமாலை பாராயணம், ஐந்து ஆண்டுகளாக பகவான் தொடர்புடைய விழாக்களுக்கு தவறாமல் வந்து தவில் வாசிக்கும் சிறுவன், நதியின்*

*தெளிந்த நீரோட்டம், பக்தர்களைப் போலவே பகவானின் பிரசாதத்திற்காகக் (நாராயண சேவை) காத்திருக்கும் அணில், பறவை, நாய் மற்றும் குரங்குகள் என்று திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தை நினைவுகூரத் தவறவில்லை இந்த ரமணாலயம்.*

*அபிஷேகம் மற்றும் ஆரத்திக்குப் பிறகு அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

**அருணாசல ஆஸ்ரமா, நியூயார்க்**

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 142 ஆவது ஜயந்தி விழா கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக இணையவழி சத்சங்கம் கடந்த ஜனவரி 2, 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணி முதல் (EST) இரவு 8-30 மணி வரை (EST) நடைபெற்றது.*

*இந்த நிகழ்வில் யுனைடெட் கிங்டம், பிரான்சில் உள்ள பல்வேறு சத்சங்க குழுக்கள், அமெரிக்கா மற்றும் கனடா சத்சங்கக் குழுக்களும் இணைந்து பங்கேற்றன.*

*நிகழ்வின் இறுதியில் ஸ்ரீ ரமணாச்ரம தலைவர் டாக்டர் வெங்கட் S. ரமணன் அவர்கள் உரையாற்றினார்.*

**கோட்டூர் ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம்**

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 142—ஆவது ஜயந்தி விழா நாளன்று திருவாசக முற்றோதல் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பொள்ளாச்சி ஸ்ரீ அருணாசல ரமண சத்சங்கம் தலைவர் ரமணகுமார்—தமயந்தி ரமண குமார், தாராபுரம் சிதம்பரம் குற்றாலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.*

*திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியை பொள்ளாச்சி திருக்கயிலாயம் சிவனடியார்கள் திருக்கூட்ட அடியார்கள் நடத்தினார்கள். மேலும் நிகழ்ச்சியில் பொள்ளாச்சி, உடுமலை, கோவை அடியார் பெருமக்கள் பங்கேற்றனர். தீபாராதனைக்குப் பின் பிரசாதம் வழங்கப்பட்டது*

**ஸ்ரீ ரமண மந்த்ராலயம், திருச்சுழி யூனிராம் டிரஸ்ட்**

*142 ஆவது ரமண ஜயந்தி 30-12-2021 நாளன்று அதிகாலை 05.30 முதல் மதியம் 01.00 வரை ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் பூஜை,*

*ஸ்ரீ மகா சுதர்சன ஹோமம், பகவான் சிலைக்கு மற்றும் லிங்கத்திற்கு அபிஷேகம் நடைபெற்றது.*

## குடியாத்தம்

*பசு லட்சுமி இங்கிருந்துதான் பகவானை வந்தடைந்தாள். இங்கு உள்ள அடியவர்களும் பசு லக்ஷ்மியைப் போன்றே ஸ்ரீ ரமணரின் தீவிர பக்தர்களாவர்.*

*திரு. பாபு சிவம் அவர்கள் இந்த சத் சங்கத்தினருக்கு வழிகாட்டியாக உள்ளார். ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் நாள் இவர்கள் பகவான் ஜயந்தி விழா கொண்டாடுகின்றனர்.*


*விழாவிற்கு ஐந்து நாட்கள் முன்பாகவே பந்தல்கால் நட்டு வழிபாட்டு விரதம் துவங்குகின்றனர். இவர்களில் சிலர் மதியம் பிட்சை எடுத்து பகவானின் முன்பு வைத்து வழிபட்ட பின்னரே தங்கள் ஒருவேளை உணவை விழாநாள் வரை அனுஷ்டிக்கின்றனர்.*

*விழா அப்பிற்று ஆடிப்பாடி தொழுதவண்ணம், பகவான் சிலைக்கும் சிவலிங்கத்திற்கும் அபிஷேக ஆராதனை செய்து, தெருவையே வளைத்து, தெருவிலே அமர்ந்து விருந்து உண்கின்றனர். பந்தலிட்டு ரமணரின் பதாகைத்தூக்கி பற்பல சிறப்பு பாரிக்கும் பாமரர் கூட்டம் இது.*

*பகவான் ஸ்ரீ ரமணமகரிஷியின் 142–ஆவது ஜயந்தி விழாவை முன்னிட்டு தமது அன்னதான அறக்கட்டளை சார்பில் ஆதறவற்றோர்கள், முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர்களுக்கு அரிசி, பருப்பு மற்றும் உப்பு வழங்கி வருகின்றனர்.*

* * *

*ரமணாச்ரம ஜயந்தி விழா மற்றும்*
*ரமண சத்சங்கங்களில் கொண்டாடப்பட்ட*
*ஜயந்தி விழாக்களின் புகைப்படங்கள்*
*சிலவற்றின் தொகுப்பினை*
*பின் அட்டையின் உட்பக்கத்தில்*
*பிரசுரித்துள்ளோம்.*



## ஸ்வாமி ரமணானந்தா ஆராதனை

*ஆச்ரம முன்னாள் தலைவரான ஸ்வாமி ரமணானந்தாவின் ஆராதனை 22/12/2021 அன்று அனுசரிக்கப்பட்டது. ஆச்ரமத்தில் அமைந்துள்ள அவரது சமாதிக்கு அபிஷேக, அலங்காரம், ஆரத்தி என சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன.*

*ஸ்வாமி ரமணானந்தரின்மேல் இயற்றப்பட்ட பாடல்களை இசைத்து அன்பர்கள் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர். சிறப்பு நாராயணசேவை மற்றும் பிக்ஷை, சாதுக்கள் மற்றும் அன்பர்களுக்கு அளிக்கப்பட்டது. குரோம்பேட்டை ரமணாலயத்திலும் இவ்வாராதனை நடைபெற்றது.*





# மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்

(8-10-1925 — 17-12-2021)



*திருமதி. மஹாலக்ஷ்மி அவர்கள் தனது பதினான்காம் வயதில் (1940-களில்) தனது தந்தையார் பேராசிரியர் சுவாமிநாதன் அவர்களுடன் ஸ்ரீரமணாச்ரமம் வந்து பகவானைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்.*

*பகவான் பக்தர் குடும்பத்தைச் சார்ந்த திரு. சூர்யாநந்தன் அவர்களை 1965-இல் மணந்தார். பணி நிமித்தமாக இந்தத் தம்பதிகள் பெல்காமிற்கும் பின்னர் கொல்கத்தாவிற்கும் மாறினர். தாங்கள் இருந்த இந்த இரு இடங்களிலும் ரமண சத்சங்கங்களை நடத்தி வந்தனர்.*

*திரு. சூர்யாநந்தன் அவர்கள் 1986-இல் சிவில் ஏவியேஷன் துணை இயக்குநராக இருந்து பணி ஓய்வு பெற்றபிறகு, ஸ்ரீபகவான் தரிசன நிமித்தம் ஆச்ரமத்தின் அருகிலுள்ள ஸ்ரீரமண நகரில் வீடு கட்டி, அருணாசலத்திலேயே இத் தம்பதிகள் நிரந்தரமாக தங்கலாயினர். அடக்கமும், சாந்தமும் நிறைந்த இவ்விருவரும் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் மற்ற அன்பர்களிடம் பழகுவார்கள்.*

*மஹாலக்ஷ்மியம்மாள் சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி உள்ளவர். ஒவ்வொரு மாதமும், ஸ்ரீபகவானது ஜனன நக்ஷத்திரத்தன்று (புனர்வசு) கீதாஞ்சலி குழுவில் கலந்துகொண்டு, மிக உற்சாகமாகப் பாடுவார்கள். ஸ்ரீபகவானது பேரருளால், ஸ்ரீபகவான் பேரில் பல*



பக்திப் பாடல்கள் எழுதும் திறம் பெற்று, அவை புத்தக வடிவிலும் வெளிவந்துள்ளன.

*29.12.2012-ஆம் ஆண்டு கணவர் திரு. சூர்யாநந்தன் அவர்கள் அருணாசல பதமடைந்த பின்னும் அருணாசலத்திலேயே தங்கி ரமண சத்சங்கம் மற்றும் ரமண சங்கீதம் வாயிலாக ரமண சேவையை அன்பர்களுக்கு செய்து வந்த மஹாலக்ஷ்மியம்மாள் வயது மூப்பு மற்றும் சிறிது உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 17.12.2021 அன்று சென்னையில் தனது 96-ஆம் வயதில் ரமண பதமடைந்தார். 28.12.2021 அன்று அன்னாரின் நினைவாக ஆச்ரம அன்பர்கள் சிலர், அவரது ரமண நகர் இல்லத்தில் அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர்.*



## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2022

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *ஜனவரி* | 17 | *திங்கள்* | *அதிகாலை 3.20* | 18 | *செவ்வாய்* | *காலை 5.18* |
| *பிப்ரவரி* | 15 | *புதன்* | *இரவு 9.42* | 16 | *வியாழன்* | *இரவு 10.25* |
| *மார்ச்* | 17 | *வியாழன்* | *மதியம் 1.29* | 18 | *வெள்ளி* | *மதியம் 12.24* |
| *ஏப்ரல்* | 16 | *சனி* | *அதிகாலை 2.25* | 17 | *ஞாயிறு* | *நள்ளிரவு 12.30* |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண* கேந்திரம் | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 9597740111 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



பகவான் ரமண மகரிஷிகளின் 142 ஆவது ஜயந்தி விழா (21/12/2021) – திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம், திருச்சுழி சுந்தர மந்திரம், மதுரை ரமண மந்திரம், சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமணாலயம், பூண்டி, குடியாத்தம், கோவை, பொன்னிறை, மதுரை மற்றும் இலங்கை என பல்வேறு இடங்களில் சிறப்பாக கொண்டாடப்பெற்றது. அவைகளில் சிலவற்றின் புகைப்படத் தொகுப்பை இங்கே வழங்கியுள்ளோம்.

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

